போன் நெ. 15. விலை 2 அணா. REGD No. 4642

திராவிடநாடு

ஆண்டு சந்தா ரூ. 7—0—0

மலர் 13 | 10—4—55 | இதழ் 40

அதைத்தான் ★ ★ சொல்கிறோம்!

[அரங்கண்ணல்]

★

"பார்க்கப் பொறாமையாயிருக்கிறதடா, உன்னை!" என்று பெருமூச்சுடன் தோழன் சொல்ல, "ஏனப்பா அப்படி?" என்று நண்பன் கேட்க, "எங்கு போனாலும் உனக்கென்று ஒவ்வொருத்தி இருக்கிறாள்! பஞ்சணைக்கோர் பட்டமகிஷி—பகலுக்கு ஓர் ராணி; இரவுக்கோர் இன்பவல்லி. இப்படியெல்லாம் இருக்கிறதப்பா உனக்கு" என்று சோகத்துடன் சொல்ல; தோழனின் தாபத்தையும் கோபத்தையும் கண்ட நண்பன், நளினிகளிருக்குமிடங்களைக் காட்டி, "நாடிடு தோழா! கூறிடு என் பேரை! கோமளவல்லிகள், ஓடோடி வருவர்" என்று விலாசமுரைக்கும் வேலையில் ஈடுபட்டான்.

"யார் அந்தத் தோழன், யாருக்குக் கிடைத்தான் அப்பேற்பட்ட தோழன்" என்று கேட்க நினைப்பர், அவசரகுணமுள்ள அன்பர்கள்.

'சந்துமுனை சாம்ராஜ்யாதிபதி'யானாலும், உற்ற நண்பனுக்கு, 'இடம் தேடித்தரும்' இந்த வேலைக்கு முன்வரமாட்டார்கள்! இலை மறைகாயென, பார்த்தால் பாராததுபோலவும், சந்திக்க நேர்ந்தால் முக்காடுபோட்டுக்கொண்டும் ஒதுங்குவர்-அப்படி 'ஒதுங்குவது'தான் அந்த இடத்து நாகரீகம்.

ஆனால், நான் குறிப்பிடும் நண்பர்கள், மனிதர்களல்ல; ஆகவே, 'பரிமாறி'க்கொள்ளுமளவுக்குச் சென்றார்கள், பாவை வேட்டையில்.

விலாசங்கள், உரைத்தான் ஒருவன்!

பெற்றவன், 'பேரின்பம் பெறப் போகிறோம்' எனும் ஆவலுடன் நுழைகிறான். — ஒரு வீட்டுக்குள்!

தாசி வீடுதானே!—எனக் கேட்பீர்கள்.

அல்ல! அல்ல!! — குலஸ்திரியின் வீடு; கோணல் மதி கொண்டவன், நுழைகிறான்.

அங்கே, அவன் கண்ட காட்சி என்ன!! எந்த நண்பன், இவனுக்கு விலாசமுரைத்தானோ, அவனே இவனுக்கு முன்னதாகப் போய் அந்த வீட்டு எழிலாளோடு, இருக்கிறான்.

"என்னடா, நண்பா! இது!"

"சரிடா! போடா! அடுத்த வீட்டுக்கு......"

அடுத்த வீடு—நுழைகிறான். அங்கும், அதே நிலை! எப்படியோ, இவனுக்கு முன்னாடியே போய், இன்பம் அனுபவித்துக்கொண்டிருக்கிறான், விலாசமுரைத்தவன்!!

அடுத்த வீடு—அடுத்த வீடு-இப்படி, பதினாயிரம் வீடுகளுக்குள் நுழைந்து நுழைந்து வந்துவிட்டான், துடியிடையைத் தொடவும், தோளணைப்பைப் பெறவும் ஆசைப்பட்ட 'அபாக்கியவான்'. எங்கும் இவனுக்கு இடமில்லை! ஏனெனில், எவன் இவனுக்கு விலாசம் உரைத்தானோ அதே நண்பன் 'அறுபத்து நான்கு கலை'களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறான்!

என்ன செய்வது? 'மோக லாகிரி, குடைகிறது! தோழனைச் சந்திக்கிறான், ஓரிடத்தில்!! "துஷ்டா! ஏனடா, என்னை இப்படி ஏமாற்றினாய்? ஆசை காட்டி மோசம் செய்யலாமா! மோகவெறியால்தானே, உன்னிடம் பல்லைக் காட்டினேன். எனக்கு 'அட்ரஸ்' கொடுத்துவிட்டு, ஒவ்வொரு வீட்டுக் கட்டிலிலும், எனக்கு

முன்பாக, எப்படியோபோய் நீ உட்கார்ந்துகொண்டு, இடம்கிடைக்காமல் செய்துவிட்டாயே! இது தகுமா? உற்ற நண்பனுக்கு நீ செய்யும் உதவியா இது?'' என்றுதானே, சீறியிருப்பான் எனக் கருதுகிறீர்கள்.

அதுதான், முன்பே சொன்னேனே, இருவரும் மனிதர்கள் அல்லவென்று அதனால், ஏமாந்தவன், கோபிக்கவில்லை, அப்படி!

''பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் நீலமேகா! மதன் விடும் கணையோ, அனலாகி எரிக்கிறது என்னை. ஆசையையோ, அடக்க முடியவில்லை! ஆளோ, கிடைக்கவில்லை!! எங்குபோனாலும், ஏந்திழையர், உன் மடியில் கிடக்கின்றனர். எப்படித்தான், மயங்கினரோ, இத்தனைபேரும் — என்று எண்ணினேன். அப்படி எண்ண, எண்ண, எனக்கே ஒரு விபரீத ஆசை உண்டாயிற்று. உன் கலியாண குணம் கண்டு, வண்டு கண்ட மலரெனக் கிடக்கின்றனரே, மாதர்கள்—அவர்களிலே நானும் ஒருவனாகயிருந்தால், இவ்வளவு கஷ்டமில்லையல்லவா! இன்னேரம் என்னருகில் நீயும் இருந்திருப்பாய்—என் காமவிகாரமும் தீர்ந்திருக்கும் அல்லவா? ஊம்..ஏன் பிறந்தேன், நான்—ஆணாக!''

''அதனாலென்ன?''

''என்ன சொல்லுகிறாய், நண்பா!''

''எனக்கும்கிடைக்குமா அந்த இன்ப வல்லிகள் பெற்றபேறு''

''ஓ! அதோ பார்த்தாயா! என்ன அது...''

''ஆறு, ஓடுகிறது''

''அதில் போய் விழு...''

''என்ன?''

''அழுக்கையெல்லாம் போக்கிக் கொண்டு, வா, உடனே...''

''வந்து...''

''அட பைத்யக்காரா! வா, பிறகு சொல்கிறேன்''

வாசகத் தோழர்களின் பொறுமையைச் சோதித்து, 'ஆபாசம், ஆபாசம்' என்று நீங்கள் சூட்டும் பழியைப் பெற விரும்பவில்லை, நான். அதனாலேயே முன்பே குறிப்பிட்டேன், அவர்களிருவரும் மனிதர்கள் அல்ல என்று. நீராடித் திரும்பிய நண்பனுக்கும் தோழனுக்கும் என்ன நடந்தது என்பதை என் வாயால் சொல்ல விரும்பவில்லை-இதோ, நெற்றியில் திருமண்; கையில் துளசி மாலை சகிதம் விளங்கும் பாகவதர் சொல்லுகிறார்.

''......இப்படியாகத்தானே, அந்த இரண்டு பேரும், எத்தனையோ வருஷ காலம், ஈருடலும் ஒருயிரும்போல், கூடிக் களித்து சுகம் அநுபவித்தனர்...''

செச்செச்சே—என்பீர்கள்.

கதை, அதோடு நின்றுவிடவில்லை.

காமரசத் தோழர்கள் இருவருக்கும், குழந்தைகளும் பிறந்தன — அதுவும் அறுபது குழந்தைகள்! அந்த அறுபது குழந்தைகளைத்தான், நாம், அறுபது வருஷங்களாக்கி ''பிரபவ,...விபவ...'' என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம்!!

விலாசம் கேட்ட நாரதர்—நாரதியாக, விலாசம் உரைத்த மாயக்கண்ணன், கணவனாக—இருவருக்கும் இத்தனை குழந்தைகள் பிறந்தன!!

*

வரப்போகிறதே, தமிழ் வருஷப் பிறப்பு!-அதற்காகக் குறிப்பிடவில்லை, இந்த ஆபாசக் கதையை.

அம்மணி ராமராவ் என்பார் சென்ற வாரம் சென்னையில் நடைபெற்றதோர் மாநாட்டில் செப்பிய வாசகம் ஒன்று, சிந்தனைக்குக் கொண்டு வந்தது இதனை.

தேவடியாள் வீடு சென்று திரும்பும் திருவரங்கன்! மட்டையடிகொடுத்து, கதவைத் திறந்துவிடும் மலர்மங்கை!!-தாருகாவனத்து ரிஷிபத்தினிகளுடன் குலவிய பரமசிவன்! குருபத்தினியைக் கூடிய சந்திரன்! இந்திரனுக்கு ஆசைப்பட்ட அகலிகா! ராதையைத் தேடிஓடிய கிருஷ்ணன்! கங்கையைத் தலையில் வைத்திருக்கும் கங்காதரன்! குழந்தை பிறக்காமல், துதிக்கையால் தடுத்த கஜமுகன்! பார்வதியைக் கண்டு மோகமுற்றுச் சென்ற பிரம்மா! அரச சபையில், தவசிரேஷ்டர்களை மயக்குவதற்கென்றே ரம்பையையும் மேனகையையும் திலோத்தமையையும் 'ஸ்டாக்' வைத்திருந்த இந்திரன்! சீதையின் அவயத்தைக் கொத்த ஆசைப்பட்ட அவன் மகன் ஜயந்தன்! அநுசூயையை நிர்வாணமாக்கி, பிச்சை கேட்கச்சென்ற, பிச்சாண்டி! ஆலிலை கிருஷ்ணன், ஆயர்பாடியில் செய்த லீலை!!—இப்படி, படிக்கிறோமல்லவா, எல்லாம் வல்ல 'இறைவனின் திருவிளையாடல்களைப் பற்றி! இதனையெல்லாம் கவனமூட்டும் வகையில், அம்மாநாட்டில் பேசியிருக்கிறார் தோழியர் ராமராவ்.

நடைபெற்ற மாநாடு, நன்னோக்கம் கொண்டதோர், பணிக்காக. சமுதாயத்தில், சந்துமுனைச் சரசிகளும், அந்திநேரத்து அழகிகளும் அதிகம் இருக்கிறார்களே அதற்குள்ள காரணம் என்ன, அதனை எப்படிப்போக்குவது என்பதை ஆலோசிக்கும் மாநாடு, அது. அகில இந்திய அடிப்படையில், அப்படியொரு, இயக்கம் இருந்து வருகிறது—அரசாங்க ஆதரவுடன்!!

அந்த மாநாட்டில் பேசிய அம்மையார் ராமராவ், 'அந்திநேரத்து அழகிகள்' அதிகமாயிருக்கும் காரணம் பற்றி விளக்குகையில், ''வேதகாலத்து சாபத்தீடு, இது!'' என்பதாகச் சொல்லியிருக்கிறார். ''இந்தப் பிரச்னையில் வெற்றி காண வேண்டுமானால், மத மூட நம்பிக்கைகளை நாம் ஒழித்தாக வேண்டும்'' என்றும் சொல்லியிருக்கிறார்.

வழுக்கி விழுந்தோரின் கதைகளை, தினசரிக் கேள்விப்படுகிறோம்!

நடமாடும் நாசம், சதிராடும் சனியன், படமெடுத்தாடும் பாம்பு—இப்படி, வர்ணிக்கவும் தவறுவதில்லை, அவர்களைப்பற்றி. உதடுகளில் சாயத்தை அப்பிக்கொண்டு, கன்னங்களில் 'கலர்' தடவியவண்ணம், கண்ணாடியும் கையுமாய், கதவோரத்தில் நின்றுகொண்டு, கைதட்டியும் கண்ஜாடைசெய்தும் 'இரவைக் கழிக்க' அழைக்கும் ஏந்திழைகளைப்பற்றி, இதயமுருகாதார், இரார்! ''வயிற்றுப் பிழைப்புக்காக, விபசாரம் செய்யும் பெண் இருக்கிறாளே, அவளை, நான், எள்ளிநகையாடமாட்டேன்! கையெடுத்துக் கும்பிடுவேன். கண்கண்ட தெய்வம், அவள்தான்'' என்று உத்தமர் காந்தியடிகள் ஒரு முறை மனமுருகிச் சொல்லியிருக்கிறார். விபசாரி, விவஸ்தை கெட்டவள், பொதுமகள், பெண்ணல்ல புண்—என்று அப்படிப்பட்டவர்களைப் பற்றி அள்ளி வீசப்படும், கேலிச் சொற்களுக்கும் அளவில்லை.

சமூகம், அவர்களை, பகல் காலத்தில் படாதபாடு படுத்துகிறது—இழிச் சொற்களால்.

இரவிலோ எவனெவன் அப்படியெல்லாம் பேசினானோ, அவனெல்லாம் அவள் காலடியில், துள்ளுமத வேள்கணையாலே, தொல்லை மிக அடைந்தேன், மலராளே! என்று ஸ்தோத்தரிக்கத் தவறுவதில்லை.

அழகு! அவர்களுக்கு மூலதனம். வயிறார உண்ண, வாழ்க்கைத் தேவைகளைப்பெற, அந்த மூலதனத்தை வைத்தே, அவர்கள் வியாபாரம் செய்கின்றனர். சதை வியாபாரம்!—அப்பப்ப, இதனைச் சகித்துக்கொள்ளுமளவுக்கு, அவர்தம், மனம் என்னென்ன கஷ்டங்களை அனுபவித்து பண்பட்டிருக்குமோ?-என்றெண்ணியதால்தான், காந்தியடிகள், வழுக்கி விழுந்தோரை தெய்வத்தின் நிலையில் வைத்து எண்ணினார் போலும்!!

லேடி ராமராவ், வெளியிட்டிருக்கிறார். இந்திய சர்க்கார் இது சம்பந்தமாக அமைத்த கமிட்டியினர் நாட்டின் நானாவிடங்களிலும் சுற்றிப் பார்த்துப் புள்ளிவிபரங்கள் சேகரித்ததில், வறுமையின் காரணமாகவே வழுக்கி விழுந்தோர் தொகை அதிகரித்து வருவதாக. தெரிகின்ற உண்மை, இது! விபசாரங்கள், நாட்டில் அதிகரிப்பதற்குக் காரணம், சீலர்கள் சிலர் செப்புவதுபோல, உடற்பசி மட்டுமல்ல. ஒரு ஆடவனுக்கு உடல் பசி ஏற்படுகிறது, பணமும் கையில் நிறைய இருக்கிறது, 'படுக்கை 'தேடு

கிருன்; அவன், எவ்வளவு குரூபியாக இருந்தால்கூட 'நிமிஷ நேரத்துச் சுகத்துக்காக; உடலை விற்கத் தயங்குவதில்லை—ஒரு பெண். காரணம், பணம்தான்! எனவே, இந்த வறுமை ஒட்டப்படுவதற்கான முக்கிய முயற்சிகளை அரசாங்கம் செய்யவேண்டும்.

அதை விடுத்து, சில மேதாவிகள், சினிமா ஒன்றின் காரணமாகவே, 'வழுக்கி விழுந்தோர்' அதிகரிப்பதாகவும், சில திரைப் படங்களைப் பார்ப்பதால், வாலிபர்கள் மனம் கெட்டுக் கண்ட கண்டபடி செல்லுவதாகவும் சொல்லுகின்றனர்.

அந்த 'சிந்தனையாளருக்கு' லேடி ராமராவ் சொன்ன 'வேத காலத்து சாபத்தீடு' என்ற வாக்கியத்தையும், 'மத நம்பிக்கைகள் ஒழியவேண்டும்' என்ற வார்த்தைகளையும் கவனமூட்டுகிருேம்.

பெண்களை விலைமகளாகக் கருதும் பழக்கம், வேதகாலமுதலே இருந்து வருகிறது! மாயவிகாரம்—ஊத்தைக் குழி — சோற்றுப்பாண்டம் என்று சித்தரும் முக்தரும் பாடினர். ஆனல் அப்படிப்பாடியோரே, அருக்கு மங்கையர் மலரடி வருடத்தயங்கவில்லை. ஆண்டவனே, பக்தன் சுந்தரமூர்த்தி நாயனுரை, தாசி வீட்டுக்கு அழைத்துச் செல்ல 'திருவுள்ளம்' இரங்கினுராம்! அதே வேலையை, அரை ரூபாய், ஒரு ரூபாய்க்காக ஒருவன் செய்தால் 'டாபர்மாமா' என்று எளிதில் அழைக்க முடிகிறது!! பஞ்சமா பாதகங்களில் ஒன்று; விபசாரியை யமகிங்கிரர்கள் இழுத்துப் போய்ச் செக்கிலாட்டுவர்—என்றெல்லாம் எழுதி வைத்துட்டு, அதே சமயத்தில் வள்ளியிடம் சென்று, ஆலோலம்பாடி 'சாயாத' கொம்புகளைப் பற்றி வர்ணித்த சுப்ரமணியனையும், 'காமி சத்யபாமா கதவைத்திறவாய்' என்று கெஞ்சிய கிருஷ்ணனையும், அவர்கள் செய்த ஆபாசத் திருவிளையாடல்களையும் -சொன்னல், மனம் எப்படியிருக்கும்! கந்த மூலாதிகளிலேயே காலம் கழிப்பவன்கூட, மோகம் பிடித்தாடாமல் என்ன செய்வான்!!

'தமிழ் வருஷங்கள்' பற்றி தலைப்பில் தந்த கதையையே பாருங்கள். என்ன ஆபாசம்! கூசுகிறதே, எழுத!

இப்படிப்பட்ட ஆபாசக் கதைகளை வைத்துக்கொண்டு, அதே நேரத்தில் சீர்திருத்தம் செய்யவும் முற்படுகிருேம் -இதனை நன்ருக உணர்ந்ததால்தான் அம்மணி ராமராவ், 'மதமூட நம்பிக்கைகள் அழிவது மிகவும் அவசியம்' என்று குறிப்பிட்டிருக்கிருர்.

இந்த நாட்டில், இன்றைய தினம், வீதிக்கு வீதி, சந்துக்குச்சந்து, விழியரசிகள் பலரைக் காண்கிருேம்! வறுமையின் விளைவு!!—என்பதையும் தெளிவாக உணருகிருேம்.

ஆனல் அந்தக்காலத்தில்—வறுமையே இல்லாத காலத்தில், சேர இளவலும் சோழன் முடியும் பாண்டியன் பெருமையும் தமிழ் மாநிலத்தில் பரவிக்கிடந்த காலத்தில், இதுபோன்ற விலைமாதர்கள் இல்லாமலிருந்தனரா? இருந்தனர்! இப்போது, விபசாரிகள் அதிகம்—அப்போது, பொதுமகள், கணிகையர், ஆடற்கிழத்திகள் எனும் பேரால் இது போலப் பலர் இருந்தனர். அதற்குக் காரணம் என்ன? தேவனின் ஆலயங்கள் தோறும், தேவதாசிகள் இருக்க என்ன காரணம்? அப்படியிருப்பது, ஆரியமதத்தின் கட்டளை யென்று சொல்லப்பட்டது — அந்தத் தேவதாசிகள் ஆண்டவனுக்கு அர்ப்பணிக்கப் பட்டவர்கள், அவர்களை ஆண்டவனின் அடியார்களான கோயில் குருக்கள்மார் எது வேண்டுமானுலும் செய்யலாம்—என்கிற கொடிய முறை, தாண்டவமிடலாயிற்று. அந்தத் தாண்டவம், இப்போது ஒரளவு மாறி, சமூக வேகத்துக்குத் தலைசாய்த்தோர் அந்தப் பழைமையை ஒழித்துக்கட்ட முன்வந்துவிட்டனர். சுயமரியாதை இயக்கச்சார்பில் அந்தக் குறிக்கோளுடன் நடைபெற்ற இசை வேளாளர்கள் மாநாடு, எத்தனையோ, உண்டு. இந்துமதக் கொடுமைக்கு ஆளான அந்தச் சமூகம், இன்று விழித்துக்கொண்டு விட்டது. மூவலூர் மூதாட்டி, முத்துலட்சுமி ரெட்டி போன்ருேரின் அரும் சேவையால் 'பொட்டுக்கட்டுதல்' எனும் பழக்கம், சட்ட விரோதமாயிற்று. ஆனல் சட்டம் வரும்போது, சல்லடம் கட்டிக் கொண்டு எதிர்த்தவர், காமராஜரின் ஆசானுன சத்தியமூர்த்தி அய்யர் என்பதைச் சரிதம் மறந்துவிடாது!

அப்படி, அவர்கள் எல்லாம் திருந்தியும், 'விபசாரம்' அதிகமாவதற்குள்ள காரணம் வறுமைதான். வறுமைத் தேள் கொட்டும்போது, எவ்வளவு பெரியஉத்தமியானுலும், வழுக்கிவிழத்தான் நேருகிறது. இந்தக் கொடுமையை நன்ருக உணர்ந்ததால்தான் புதுமலர்ச்சி எழுத்தாளர்களின் பேனு, அப்படிப்பட்ட அபாக்கியவதிகளின் பக்கம் வேகமாக ஓடுகிறது—காலஞ் சென்ற புதுமைப் பித்தன் தீட்டிய 'பொன்னகரம்' எனும் சிறுகதை, அதற்கோர் எடுத்துக் காட்டு. ராஜ்கபூர் எனும் வடநாட்டு நடிகர் எடுத்த 'பர்ஸாத்' எனும் படத்தில், ஒருகாட்சி வரும்.!—கதாநாயகன், காதலில் வெற்றிகாணுமல் தவிக்கிருன்; அப்போது அவன் மனதை மாற்ற அவனுடைய நண்பன் அவனை ஒரு விலைமாதின் 'பொந்து'க்கு அழைத்துச் சென்று விட்டுவிட்டுத் திரும்புகிருன். விலைமாதும், வருகிருள் — உடைந்த கண்ணுடியில் தன் உருவைச் சரிப்படுத்திக் கொண்டு!! சரசப் பேச்சு, பேசுகிருள்—அப்போது உள்ளேயிருந்து ஒருஅழுகுரல் கேட்கிறது—அவ்ளது குழந்தையின் குரல்! உடனே ஓடுகிருள், அதனிடம்—அதற்குப் பாலூட்டிவிட்டு, பணம் தர வந்தவனிடம் வர நினைத்துச் செல்கிருள். கதாநாயகன் அக்காட்சியைக் காண்கிருன். கண்களில் நீர்வருகிறது —பணத்தை எடுத்து அவளின் காலடியில் வைத்துவிட்டு, வெளியேறுகிருன். எவ்வளவு உருக்கமான காட்சி, இது. இந்தப்படத்தைப் பார்த்தவர்கள், பம்பாய் நகரில் விபசாரிகள் வசிக்கும் வீதியையும் நேரில் கண்டால் மனம் துடித்துப் போவார்கள். பம்பாய் சர்க்கார், 'லைசென்ஸ்' வழங்கி, விபசாரிகளை வீதிகளில் அலைய விட்டிருக்கிறது. இவ்வளவு கோரமான காட்சிகளைக் காணும் எழுத்தாளன் எழுதாமலும், கலைஞர்கள் நாடகமாக்கிக் காட்டாமலும் எப்படியிருக்க முடியும்? அவர்கள் அப்படிச்செய்வது, சமூகத்திலிருக்கும் இந்தக் கொடுமைகள், அகலவேண்டும் என்பதற்கேயொழிய வளர்வதற்காக அல்ல! இதனை. சினிமாவைப்பற்றித் திட்டும், சிலர்கள் அறிய வேண்டும்.

ஐவருக்கும் பத்தினி! ஆண்டுக்கொருத்தனிடம் இருப்பாள்!—என்கிற, ஆபாசக் கதைகளும் அதுபோலக் குவிந்திருக்கும் புராண மூட்டைகளும், தலைமுறை தலைமுறையாக, நமது

(16-ம் பக்கம் பார்க்க)

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு

10–4–55ல் செங்கற்பட்டுமாவட்ட தி மு. க. செயற்குழுத் தேர்தல், காஞ்சிபுரம் திராவிட நாடு நிலையத்தில், பகல் 2-30 மணிக்குத் தோழர் அ. பொன்னம்பலனுர் அவர்கள் தேர்தல் அதிகாரியாக இருந்து தேர்தலை நடத்திவைப்பார்கள். ஆதலினுல், புதிதாகத்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிளைக்கழக மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் தவருது தேர்தலில் கலந்துகொண்டு முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோர்களைத் தேர்ந்தெடுப்பதோடு, பொதுக்குழு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுப்பதற்கு, தவருது வருகை தந்தருள வேண்டுகிறேன். கிளைக் கழகத் தோழர்கள் தலைமை நிலைய ஒப்புதல் அஞ்சலையும் உடனெடுத்து வர வேண்டுகிறேன்,

C. V. M. அண்ணுமலை
செயலாளர், தி. மு. க.
செங்கற்பட்டு மாவட்டம்.

அடுத்த இதழில்

பிரான்சு நாட்டு
வரலாற்றுச் சுவடி
தரும் சம்பவம்

★

மத வேடமிட்டு அரசபீடம்
ஏறுவோரால் ஏற்படும்
ஆபத்தை எடுத்துக்
காட்டுவது

★

அரசுக்காக! நாட்டுக்காக!
என்று மயக்கமொழி பேசி
மக்களை வாட்டும்
கொடுமையை விளக்குவது

★

அரசாண்ட ஆண்டி

★

நூலேணி வழியாகத்
தப்பிச் சென்ற
மகாராணி

★

பறவைக் கூட்டத்தில்
பரவசமான
பட்டத்தரசன்

★

பாகு கனிமொழி மாதே!
உன் பாதமலர்
தொழுதேனே!
என்று பஜிக்கும்
பிரபுக்கள்

★

பரமண்டலத்திலே
பிதா இருக்கிறார்!
பாராள நான் இருக்கி
றேன் என்று பேசிடும்
பண்டாரம்

இவர்களின் கோலாகலத்தைக் காட்டுவது.

★

சுவைமிக்க பகுதிகளாக
'திராவிட நாடு' இதழில் வெளிவருகிறது.

★

பிரான்சு நாட்டு வரலாற்றுச் சுவடியிலிருந்து

அண்ணாதுரை

தரும்

சுவையும் பயனும் மிகுந்த

கட்டுரைகள்.

★

அரசியல் விளக்கம் பெற

அனைவருக்கும் பயன்படும் வகையில்

அமைந்திருக்கிறது.

அல்லாடும் ஆண்டவன்!

—::—

"கடவுள் சாட்சியாக, நான் சொல்லுவதெல்லாம் உண்மை— என்று சொல்."

"நான் ஏங்க, பொய் சொல்லப் போகிறேன்? பொய் சொன்னா, சாமி, கண்ணை அவிச்சிடாதுங்களா"

"சரி! உன் பெயர்......?"

"சாமிக்கண்ணுங்க!"

*

சாமிக்கண்ணு சாட்சி சொல்ல வந்திருக்கிறான், கோர்ட்டுக்கு! கூண்டேறிய அவனை, முதலில் 'குமாஸ்தா' சத்யம் பண்ணச் சொல்லுகிறார். அவனும், ஆண்டவன்மீது ஆணையிட்டு விட்டே, வாக்குமூலம் தருகிறான்! அவன் தந்த வாக்குமூலம் இது.

"எனக்கு, ஊர்க்காவல் வேலைங்க! ராத்திரி, மணி 12 இருக்கும். ராஜ வீதி வழியே வந்துகொண்டிருக்கும்போது, 'ஐயோ! என்னைக் குத்திட்டானே, குத்திட்டானே; என்று சப்தம் கேட்டுதுங்க. ஓடிப்போய்ப் பார்த்தேன். ஒரு பெண்ணு, இரத்த வெள்ளத்திலே கிடந்துது, இதோ, நிற்கிறாரே இவரு, கத்தியை வைச்சிகிட்டு நின்னாருங்க—பார்த்தேன், உடனே, ஓடிப்போய், போலீஸ் ஸ்டேஷனிலே சொல்லி இவரைப்பிடிச்சோமுங்க."

*

இளம்பெண், அவள்! கொலையுண்டதும் உண்மை, பிணமான அவளை, பரிசோதனை செய்த, பஞ்சாயத்தாரும் 'கொலையால் ஏற்பட்ட மரணம்' என்று தீர்ப்பளித்துவிட்டனர். கண்ணால் கண்ட சாட்சி இருக்கிறது! புலன் விசாரணை செய்த போலீசாரும், 'கத்தியும் கையுமாய் பிடிபட்ட வாலிபனே' கொலை செய்திருக்கவேண்டும் என்பதற்கான ஆதாரங்களைச் சேகரித்திருக்கிறார்கள். அந்த ஆதாரங்களை, விசாரணை செய்த சப்-இன்ஸ்பெக்டர் சாம்பு, சமர்ப்பித்த விபரம்;—

கமலாவும், கருப்பனும் காதலர்கள்! ஆனால், வெவ்வேறு ஜாதி, என்றாலும், இரண்டுபேரும், ஒருவரையொருவர் கலியாணம் செய்துகொள்ளுகிற அளவுக்கு காதல் கொண்டிருந்தார்கள். ஆனால் கமலாவின் அப்பா, ஜாதிவிட்டு ஜாதி மாறி கலியாணம் செய்துகொடுக்க விரும்பவில்லை. சொந்தக்காரரும், பணக்காரருமான பாக்கியநாதனுக்குத் திருமணம் செய்துதர ஏற்பாடு செய்திருந்தார். இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட கருப்பன், 'உண்மைதானா' என்று கேட்க கமலாவிடம் போயிருக்கிறான். கமலாவும், தன் அப்பாவின் விருப்பத்தை மறுக்க முடியாமல் ஒத்துக்கொண்டதாகச் சொல்லியிருக்கிறாள்! அதற்கு இதோ, கருப்பன் வீட்டிலிருந்து கைப்பற்றிய கடித ஆதாரம் இருக்கிறது. கடிதம், கமலம் கருப்பனுக்குத் தீட்டியது- "ஆசைக் காதலரே அப்பா, நமக்கு எமனாக இருக்கிறார். பாக்கியநாதனைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டுமாம் நான். பணம் இருக்கிறதாம், அவரிடம்! மறுத்தால், கிணற்றில் விழுந்து விடுவதாகப் பயமுறுத்துகிறாள், அம்மா. இதுபற்றி ஒரு முடிவு செய்ய வேண்டும், என்ன செய்வது? தெரியாமல் திகைக்கிறேன்! இந்த அபாக்கியவதியை, மறந்துவிடுங்கள். இந்த உலகத்தில், ஏழைகளுக்கும் காதலுக்கும் எட்டாத தூரம் உண்டுபோலிருக்கிறது. கமலம்" கடிதத்தில், தன்முடிவைத் தெரிவித்திருக்கிறாள்! முடிவைக் கண்ட கருப்பன் மூர்க்கனாகி இருக்கிறான்—கோபத்துக்கு ஆளாகி, காதலியும் தன்னைப் புறப்பணிப்பதாக எண்ணி, இந்தக் கோரக் கொலையைச் செய்திருக்கிறான்."

*

இந்த விவரத்தை வெளியிடுவதற்கு முன், சப்இன்ஸ்பெக்டரையும், கோர்ட்டு குமாஸ்தா கேட்கத் தவறவில்லை.

"ஆண்டவன்மீது ஆணையாக நான் சொல்லுவதெல்லாம் உண்மை"—என்று சொல்லும்படி. சப்இன்ஸ்பெக்டரும் சொல்லத் தவறவில்லை!! கொலையுண்ட கமலம்பற்றி, சாட்சியும் அதிகாரியும் கருப்பனே கொலைசெய்தவன் என்று 'ஆண்டவன்மீது ஆணை'யாகச் சொல்லிவிட்டார்கள். இதோ கருப்பன் வாக்குமூலம்! அவனும், 'கோர்ட்டு குமாஸ்தா கேட்டதுபோல, ஆண்டவனின்மீது சத்யம் செய்துவிட்டுச் சொல்லுகிறான்—"நான் கொலைகாரனில்லீங்க, நான் கொலைசெய்யவும் இல்லே! கொஞ்சிக் குலவிய, என் கமலத்தையா, கொல்லுவேன் நான்? எசமான்! என் வார்த்தையை நம்புங்க. ஆண்டவன்மீது ஆணையாகச் சொல்றேன்—நான் கொலை செய்யலீங்க. கொலை நடந்த இரவு 12-மணிக்கு என்னைத் தன் வீட்டுக்கு வரச் சொன்னதா, ஒரு ஆள்மூலம் கமலம் சொல்லியனுப்பிச்சுதுங்க. அதனால்தான் போனேன். கொல்லைக் கதவு சாத்தியிருக்கும்—எப்பவும். அன்னைக்குத் திறந்திருந்துது. உள்ளேபோனேன். வீட்டிலேயாரும் இல்லெ. கமலம்மட்டும் தூங்கிகிட்டு இருந்துது. எழுப்பினேன்! என்னைப் பார்த்து திகைச்சுது! தான் சொல்லியனுப்பலேன்னும் சொல்லிச்சு. அப்பா அம்மா, சினிமாவுக்குப் போயிருக்கிறதாகவும், சொல்லிச்சு. அதுக்குமேலே, இரண்டுபேரும், விளக்கை அணைச்சிட்டு ...... அப்ப, யாரோ வருகிற காலடி கேட்டுதுங்க. பக்கத்திலே படுத்திருந்த கமலம், 'ஐயோ! குத்திட்டாங்களே, குத்திட்டாங்களே!' என்று சப்தம் போட்டுதுங்க, இன்னு யாரோ, ஓடற சப்தம் கேட்டுது. விளக்கைப் போட்டுப் பார்த்தா, என் கமலம் பிணமா கிடந்ததுங்க! பக்கத்திலே, என் கமலத்து உயிரைப் பறித்த கத்தி, எமனாட்டம் கிடந்துதுங்க. எஜமான்! நான், சாவறதைப்பற்றி, கவலைப்படலீங்க. ஆனா, கமலத்தைக் கொன்ற பழியை மட்டும் என்மீது சுமத்தாதீங்க. எஜமான்! எஜமான்!! கடவுள்மீது ஆணையாச் சொல்றேங்க"

கருப்பன், கண்ணீர்ததும்ப, 'கடவுளே! கடவுளே!' என்று அலறிய வண்ணம்தான் இந்தச் சோகக் கதையைச் சொன்னான். ஆனால், யார் நம்பமுடியும்? சப்இன்ஸ்பெக்டரின் விசாரணைக் குறிப்புகள்—சாட்சியங்கள்—இவைகள் சொல்லுகின்றனவே. கருப்பனே கொலைஞன் என்று! சர்க்கார் வக்கீல், அதனைச் சுட்டிக்காட்டி, வாதாடுகிறார் — வழக்கு, கொலை சம்பந்தமானதுதான்!—ஆயினும், சக வக்கீல்கள் பிரமிக்கவேண்டுமே, அழகாகப் பேசுகிறார். கேளுங்கள்!

"கனம்தங்கிய கோர்ட்டாரவர்களே! காதலித்தேன் — கண்ணே, என்றேன்—அவளையா, நான் கொலை செய்திருப்பேன்? என்று கூறுகிறான், கொலைக் குற்றம் சாட்டப்பட்ட கருப்பன். அவன் கொலை செய்தான் என்பதை ருசுப்பிக்கும் சாட்சியங்களை நீங்கள் கண்டீர்கள். என்றாலும், இப்படிச் சொல்லி, காருண்யமிக்க சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முயலுகிறான். நாட்டின் நாலுவிடங்களில், சந்துமுனைகளிலும் சாக்கடைப் பள்ளங்களிலும் வெட்டிக்கொண்டு வீழ்கிறார்கள் பலபேர்—கள்ளக் காதலின் காரணமாக! அதே கள்ளக் காதல்தான், கமலத்தைக் கருப்பன் கொன்றதற்கும் காரணம். காதலித்தான் அவளை! அவளோ, பாக்கியநாதனைக் கணவனாக அடைய இருந்தாள்! சகிக்க முடியவில்லை, கருப்பனால். காதலி, காதகியாகிவிட்டாள் என்று மனம் புழுங்கினான். விளைவுதான் இந்த வேதனை"

*

தெளிவான வழக்கு! என்றே 'கனம் தங்கிய கோர்ட்டுக்கு' நீதி

சர்ச்சில்

"மாபெரும் தலைவர்களில் ஒருவராக ஆனபோதும், மக்களின் தொடர்பைவிட்டு அவர் என்றும் விலகியதில்லை" என்று பிரிட்டிஷ் முதலமைச்சராக இருந்து, ஓய்வுபெற்ற வின்ஸ்டன் சர்ச்சிலைப்பற்றி 'மெயில்' ஏடு, குறிப்பிட்டிருக்கிறது. அவ்வளவு செல்வாக்கையும் மக்கள் நம்பிக்கையையும் பெற்ற மாபெரும் அரசியல்வாதி. அரசியல் அலைகளால் அல்ல; தள்ளாத வயது பொறிக்கும் முத்திரையால், முதலமைச்சர் பதவியிலின்றும் விலகிக்கொண்டிருக்கிறார். அவருடைய ஐம்பது ஆண்டு அரசியல்வாழ்க்கையில், இரண்டு உலகப் போர்களை, சந்தித்துள்ளார். வயது, 80 ஆகிறது. நாட்டின் புகழ்மாலைகளைக் குவித்துக்கொண்டு, பீடத்தைவிட்டு சர்ச்சில் இறங்கிவிட்டார். அவருடைய சகாவான ஈடன் பிரபு அவர் இடத்துக்கு வந்திருக்கிறார்.

வழங்குவதில், எவ்வித சிக்கலும் ஏற்படவில்லை.

தூக்குத் தண்டனை! அளிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டுவிட்டது. 'கடவுள்மீது ஆணையாக' ஒவ்வொருவரும், சாட்சியம் சொல்லினர் அந்த சாட்சியங்கள், கறுப்பனின் உயிரைக் கொண்டுபோய்விட்டன!

*

கறுப்பன், தூக்கில் தொங்கிய பிறகு—சாட்சி சொல்லிய சாமிக்கண்ணு, இதோ நிற்கிறான்! பாக்கியநாதர் எதிரில்!! பாக்கியநாதர் பேசுகிறார். "சாமிக்கண்ணு! சாட்சி சொன்னதெல்லாம் சரிதான். ஆனா, என்னப்பா பிரயோசனம்? உன்னையும், உத்தண்டி, முத்தன் ஆகியவர்களையும் அவனையா தீர்த்துக் கட்டச்சொல்லி அனுப்பிச்சேன். அந்தப்பயல் கறுப்பனைக் கொன்னுபோட்டுட்டு வாங்கடான்னு அனுப்பிச்சா, என் மனசிலே இருந்த கமலத்தை எமலோகத்துக்கு அனுப்பிச்சுட்டு வந்து கேட்கிறிங்களே, அப்பா, பணம். ஊம்! உங்களுக்குப் பணம் வேறவா, கொடுக்கணும் பணம். இந்தக் கேசிலே நீங்க மாட்டிக்காமேயிருக்க, அவருக்கும் இவருக்குமா, நான் செஞ்சிருக்கிற செலவுக்கே, நீங்ககொடுக்கணும் பணம், தெரிஞ்சுதா?"

*

'பாவிப்பய!' 'அக்கிரமக்காரன்', 'இப்படிச் செஞ்சிட்டானே!'-என்று, சாமிக்கண்ணுவும், உத்தண்டியும், முத்தனும், சாலையோரத்திலும் 'டீ' கடையிலும் பேசுகின்றனர் பாக்கியநாதரைப்பற்றி! அவரோ, வில் வண்டியில், கமலத்துக்குப்பதில் கிடைத்த கோகிலத்துடன் போய்க் கொண்டிருக்கிறார் கோயிலுக்கு! 'காவடிச் சிந்து' விற்கப்படுகிறது, கறுப்பனைப்பற்றி 'கடவுள்மீது ஆணை'யாகச் சொல்லிய, சாட்சிகளும், இருந்த வண்ணமே இருக்கிறார்கள்! அப்படிச் சொல்லச் சொல்லும், 'கோர்ட் குமஸ்தாவும்' கூண்டிலேறும் ஒவ்வொருவரையும் விசாரணைக்குமுன், அப்படியே சொல்லச் சொல்லுகிறார்!! ஆனால், தண்டனை பெறுவதும், தண்டனையிலிருந்து தப்புவோரும், அபாக்கியவான்களும், பொய் சாட்சியம் சொல்லுவோரும், அக்கிரமக்காரர்களும், இருக்கத்தான் இருக்கிறார்கள்!. ஆண்டவன், என்னசெய்வார், பாவம்? கல்லாகவே இருக்கிறார்!!

★

காஞ்சியில் கலை விழா

கடந்த 30ந் தேதியிலிருந்து இத்திங்கள் 5ந் தேதி முடிய ஏழு நாட்கள் கலை விருந்து அருந்தும் வாய்ப்பு கிடைத்தது, காஞ்சிமாநகர்வாசிகளுக்கு. ஏழை மாணவர்களின் இலவசப் படிப்புக்கு உதவும் முயற்சிக்காக நடைபெற்ற இந்தக் கலைவிழாவின் மூலம், கிட்டத்தட்ட-வரவேண்டியதையும் சேர்த்து-ரூபாய் ஐயாயிரம் கிடைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. இத்தொகை, காஞ்சி எம். எல். ஏ. தோழர் தெய்வசிகாமணி, காஞ்சி கவுன்சிலர் தோழர் மோகனம், காஞ்சி தோழர் பாபு ஆகிய மூவரடங்கிய கமிட்டியின் வசம் இருக்குமென்றும், இவ்வரிய பணியினை நிறைவேற்றும் குழுவிலிருக்க விரும்புவோர் ரூ. 250 அளித்து சேர்ந்துகொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள், ரூ. 250 அளித்து, குழுவில் ஒரு உறுப்பினராகியுள்ளார்கள்.

நல்ல காரியத்துக்கு இயன்ற உதவியைச் செய்ததோடு, நாடகமூலம் பயனுள்ள கருத்துக்களைப் பெறும் வாய்ப்பும் ஏற்பட்டது, மக்களுக்கு. அப்படி நடைபெற்ற நாடகங்களைப்பற்றிய சிறு குறிப்புகளைத் தருவதோடு, இந்த ஆக்க முயற்சிக்குப் பாடுபட்ட அனைவரையும் பாராட்டுகிறோம்.

மகாராணி

மாதொருத்தியின்மீது கொண்ட மையலால் நாட்டையே மறந்த மன்னவன் ஒருவனின் இக்கதையை சீர்திருத்த நடிகர்களான எஸ். எஸ். ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன், மகாலிங்கம், திரைப்பட நடிகையர் சி. ஆர். ராஜகுமாரி, லட்சுமிகாந்தம் ஆகியோர் நடித்தனர்.

இன்பநாள்

குடும்பத்தில் ஒரு பெண் பிறந்து விட்டால், இப்போதுள்ள சமூகத்தில் என்னென்ன சங்கடங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது என்பதை அடிப்படையாகவைத்து தோழர் மூர்த்தி தீட்டிய இந்த நாடகத்தில் நடிகர்களான மனோகர், பீர்முகம்மது, வித்யாவதி, சந்திரா ஆகியோர் நடித்தனர்.

ஆசை நினைவு

காதல் பிரச்னைகளை அலசும் நோக்குடன் அமைந்திருந்த இந் நாடகம், புரட்சி நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன், எம். ஜி. சக்ரபாணி, நாராயணப் பிள்ளை, முத்துக்கூத்தன், சகுந்தலா ஆகியோரால் நடிக்கப்பட்டது.

பகைவனின் காதலி

கரிகால் பெருவளத்தானின் காலத்தை அடிப்படையாக வைத்து எ. கே. வேலன் தீட்டிய சரிதச் சித்திரமான இதில், எம்.ஜி. ஆர்.ம், அவரது குழுவினரும் நடித்தனர். வாள்போர் முதலியவைகள் நிரம்பியிருந்தது, இந்நாடகத்தில்.

மணிநாட்டுக் கூனன்

பிரெஞ்சு நாட்டு நாவலாசிரியர் விக்டர் ஹியுகோவின் 'நாட்டர்டாம் கூனன்' எனும் கதையின் அடிப்படையில், நமக்கேற்ப, தோழர்கள் வி. கே. சண்முகசுந்திரம், கலைமணி பி.ஏ.(ஆனர்ஸ்) தீட்டிய இந்நாடகம், தியாகராய கல்லூரிக் குழுவினரால் நடிக்கப்பட்டது. தோழர் லிங்கராஜ் கூனனாக நடித்தார்.

எதிர்பார்த்தது

ஏழைக்குக் காதல் கிடைக்குமா? எனும் அடிப்படையில் அமைந்திருந்த இந்நாடகத்தையும், சென்னை தியாகராயர் கல்லூரிக் குழுவினரே நடித்தனர்.

தளபதி

மாவீரன் சிவாஜியின் ஆட்சிப் பெருமையை விளக்கும் நிகழ்ச்சியொன்றினை வைத்து, தோழர் இறைமுடிமணி தீட்டிய இந்த சரித ஓவியத்தில், கலைவாணர் என்.எஸ். கே. குழு நடிகத்தோழர்களான ஓ. என். கிட்டு, பாண்டியன் முதலியோர் பங்குகொண்டனர். கலைவாணர் என். எஸ்.கே. அவர்களும் டி. ஏ. மதுரம் அவர்களும பாகம் ஏற்று மகிழ்வித்தனர்.

* * *

முதல் நாளிலிருந்து கடைசிநாள் வரையில், செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் லோபோ பிரபு, சுபம்பிரகாசம் எம். எல். ஏ., டி. சண்முகம் எம். எல். ஏ., தெய்வசிகாமணி எம். எல்.ஏ., எ. கோவிந்தசாமி எம்.எல். ஏ., 'நம் நாடு' துணை ஆசிரியர் காஞ்சி கல்யாணசுந்தரம், அண்ணாதுரை ஆகியோர் முறையே தலைமை தாங்கினர்.

நாடகத்துக்கான ஒளி ஏற்பாடுகள், சென்னை பத்மநாபன் எலக்ட்ரிக் சர்வீசாராலும், சீன் ஏற்பாடுகள் சண்முகம் சீன் கம்பெனியாராலும் செய்யப்பட்டிருந்தன.

கலைவிழா இடம், காஞ்சி பாலகிருஷ்ணனார் அவர்களால் அளிக்கப்பட்டிருந்தது. ★

★ தூங்குமிடம்! ★

பம்பாய் நகரசபை, நகரில் இரண்டு இடங்களில் இரு 'தூங்குமிடங்களை'க் கட்டுவதென முடிவு செய்துள்ளதாம். வீடுவாசலின்றி ரோடு ஓரங்களில் கிடக்கும் மக்கள், இரவில் வந்து 'தூங்கிவிட்டு'ச் செல்வதற்காகவே இவை கட்டப்படப் போகின்றனவாம்! ஒவ்வொரு கட்டடத்திலும் சுமார் 400-பேர் தூங்கலாமாம்! விண் முட்டும் மாடமாளிகைகள் நிரம்பிய, பம்பாயின் வீதிகளையேவீடுகளைக்கொண்டுவாழ்வோரின் தொகை, இரண்டு லட்சம் இருக்கலாம் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது இந்த இரண்டு லட்சத்தில் கால்வாசிப்பேர் திராவிடத்திலிருந்து சென்றவர்களாம்! பகல் முழுதும் வேலைக்கு அலைந்துவிட்டு, பாதையோரங்களையே 'பங்களாக்கள்' ஆக்கிக்கொண்டு, பரிதாபத்துக் குரிய இந்த ஜீவன்கள், அல்லாடுகின்றனவாம் அங்கே. இந்தக் கால்வாசிப் பேரும், யாராகயிருக்கமுடியும் — என்றெண்ணுகிறீர்கள்? பார்ப்பனத் தோழர்களாயிருக்க முடியாது! மாதுங்கா, அவர்களுடைய, மலர்புரி. அங்கே. 'மாமா — 'மைத்துனர்' 'அத்தங்கா' 'அம்மாஞ்சி'களிருப்பார்கள். அவர்களுக்கு. எனவே, அவர்களல்ல, அவதிக்கு ஆளாவோர்; திராவிடத் தோழர்கள்!

சென்னை சட்டசபையில் பேசிய உறுப்பினர் ஒருவர் சொன்னாராம்: தறியாளர்கள் ததும்பும் கண்ணீருடன் பம்பாயின் வீதிகளில் அலைவதாக. உண்மை! ஆலையூரிலே, பாலைவனப் பிம்பங்கள், பரிதாபச் சின்னங்களாக. வாழப் பிறந்த மனித உயிர்கள்தாம், அவையும். அப்படிப்பட்டவர்கள் அலைகிறார்கள், வாழ; இடம் தேடுகிறார்கள், இரவைக் கழிக்க. இந்தப் பரிதாபம், பம்பாயிலே வாழும் டால்மியாக்களின் கண்களைக் கவரவில்லை. அவர்கள் குவித்திருக்கும் பணம், நாதியற்ற ஏழைகளின் நலிவைப் போக்க செலவிடப்படவில்லை. அதற்குப் பதில், இன்னொரு காரியத்துக்கு, ஏராளமாகச் செலவழிக்கப்பட்டுவருகிறது — டால்மியா போன்ற பல பண பிம்பங்கள் ஒன்று சேர்ந்து நிதி திரட்டி, இந்தக் காரியத்தைச் செய்து வருகின்றனராம். இதன் விளைவாக, சுமார் **2500** பேர், இதுவரை கைது செய்யப்பட்டிருக்கிறார்களாம். ஆட்சியாளரை எதிர்த்து, 'கிளர்ச்சி' துவக்கியமைக்காக.

கிளர்ச்சி, ஏழ்மையைவிரட்டவோ இல்லாதவர்களின் துயரத்தைப் போக்கவோ அல்ல, பசுவதை கூடாது என்பதற்காக.

பம்பாய் முதன் மந்திரியின் மாளிகைக்கு முன்னர்போய், பல நாட்களாக இக்கிளர்ச்சி செய்யப்பட்டு வருகிறதாம்.

மாடுகளுக்கு அடிக்கும் யோகம் கூட, மனிதனுக்குக் கிடைக்கவில்லை.

பசுக்களைக் கொல்லுவது, இந்து மதத்துக்கு விரோதமாம்; எனவே, இக்கிளர்ச்சி.

அண்டசராசரமும், ஒரு பசுவுக்குள்ளிருப்பதாக, படம் போட்டு வைத்திருப்பதுண்டு — பல பக்தர்கள்.

ஆனிரை மேய்த்தான் குழலூதி! காளை, பரமனின் வாகனம் — இவ்வாறு, பக்த விளக்கமும் செய்யப்படுவதுண்டு. கோபூஜையும் சுமங்கலி பூஜையும்கூட அனுதினமும் நடைபெறுவதுண்டு. அப்படிப்பட்ட பசுக்களைக் கொல்லக்கூடாது என்பதற்காக இக்கிளர்ச்சி. செய்வோர், இந்துமகாசபைக்காரர்கள்' ஆதரிப்போர், ஆலையரசர்கள்!

"இந்தக் கிளர்ச்சிக்குப் பயந்து பசுவதையைத் தடைசெய்ய சட்டம் செய்யவேண்டுமென்றால், நான் ராஜினாமா செய்யவும் தயார்" என்று பார்லிமெண்டில் கர்ஜித்தாராம், பண்டிதநேரு.

இந்துமகா சபையினரின் இச்செயல், பண்டிதரின் 'ராஜீனாமா' அளவுக்குச் செல்கிறது. அவ்வளவு சக்தியுடன், ஆலையரசர்தம் கிளர்ச்சி நடக்கிறது, அங்கே! பசுவுக்காக!

இப்படி, பசுக் கொலைக்காகத் துடித்துக் கிளம்பும் தூய்யர்கள்— நடமாடும் கோயில்களான மக்களைப் பற்றி, மனதில்கூட நினைத்ததில்லை ஒருசமயமும்.

மக்கள், டால்மியாக்களின் ஆலைகளிலே—சிந்தும் வியர்வையும் கண்ணீரும் அதிகம்.

கூலி அதிகம் கேட்டால், கொட்டுவர், சட்டத்தால். வேலையினின்றும் விரட்டி, ஆலையையும் மூடுவர்.

அப்படிப்பட்ட 'பரமாத்மா'க்கள், ஜீவகாருண்யத்துக்கு வக்காலத்து வாங்க முன்வந்துள்ளார்கள். இந்த நிகழ்ச்சி நடக்கும் பம்பாயில்தான், இருக்க இடமில்லாத ஏழைகள், இரண்டுலட்சம் பேர் — அலைகிறார்கள். 'தூங்குமிடம்' கட்டுகிறது, நகரசபை. அதுவும், 800 பேர்களுக்குமட்டும். அருமையான 'பாரதபுண்ய பூமி, இது.

★

திருமண அழைப்பு

11—4—55 திங்கட்கிழமை காலை 9-மணியளவில்

'திராவிடநாடு' அலுவலகத் தோழர்:

டி. மாணிக்கம்

மங்கலம் கிராமம் எம். எஸ். வேணுகோபால் அவர்களின் மகள்

தோழியர்:

வனஜாட்சியை

வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும் மகிழ்ச்சி விழா, சின்னகாஞ்சிபுரம் வரகுவாசல் தெரு, 46-எண்ணுள்ள இல்லத்தில், சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும். அன்பர்கள் இதையே அழைப்பாக ஏற்று வரவும்.

திராவிடநாடு

காஞ்சி] 10—4—55 [ஞாயிறு

எதிரொலி, எங்கும்!

—✶—

புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பில் அமிழ்ந்துகிடந்தாலும் பொதுப் பணிகளைச் செய்வதில் நாம் காட்டவேண்டிய அக்கரையும் ஆவலும் எப்போதுமிருக்கவேண்டும் என்பதை உணர்த்துவதுபோல, 'அறிவகம்' மித்திரனின் சித்திரத்தை பெரிய அளவில் அச்சடித்து, நாடு முழுமையுமுள்ள கிளைக் கழகங்களுக்கு அனுப்பிவைத்திருக்கிறது.

அந்தச் சுவரொட்டிகளைத் தட்டிகளில் ஒட்டி, மக்கள் கூடும் ஒவ்வொரு இடத்திலும் வைக்கவேண்டும் என்பதே, தலைமை நிலையத்தின் ஆசையாகும்.

சித்திரம், அரியதோர் புதுமையை எடுத்துச் சொல்கிறது என்பதற்காக அல்ல; எத்தனையோ ஆண்டுகளாக நாம் எடுத்துச்சொல்வதுதான். என்றாலும், நமது குரலை, கூச்சல் என்று கேலியும் கிண்டலும் புரிந்த கூடாரத்திற்கும் 'தெளிவு' ஏற்பட்டிருப்பதை அச் சித்திரம், தெரிவிப்பதாலேயே கடந்த வாரம் நமது இதழ் முகப்பில் பிரசுரித்திருந்தோம்—நமது கழக ஏடுகள் சிலவும், வெளியிட்டிருந்தன.

அதனையே பெரிதாக்கி, இரு வண்ணங்களில் அச்சிட்டு, எல்லாக் கிளைக் கழகங்களுக்கும் அனுப்பிவைக்கப் பட்டிருக்கிறது.

''இது என்னய்யா, வேடிக்கை!''—என்று நினைப்போர்கூட இருக்கலாம்.

ஆனால், அப்படி நினைப்போர், நாம் செய்யும் எந்தக் காரியங்களையும் அலட்சியத்தால் அழித்துவிடலாம் என்று கனவுகண்டுகொண்டிருப்போர் என்பதை மறந்துவிடமுடியாது.

''போஸ்டர் ஒட்டுவதால், வந்துவிடுமா திராவிடநாடு?''

''வீணை விளம்பரம் தருகிறார்கள்—ஒரு கேலிச் சித்திரத்துக்கு!''

''நாட்டின் பசியும் பட்டினியும்போய் விடுமா?''

இப்படியெல்லாம் கூட, கேள்விக் கணைகளைப் பூட்டுவோருண்டு! அவர்கள்தான், நாம் ஐந்தாண்டுத் திட்டக் கண்டனம் செய்யவேண்டும் என்று முடிவு செய்ததும், முகாரியும் முழக்கமும் செய்தவர்கள் என்பதையும், நாம் மறந்துவிடவில்லை.

இவை, சகஜம்! எந்த நற்காரியத்துக்கும், இப்படி இழுக்குரைப்போர், இருப்பது மிகமிக சகஜம். மூட்டை தூக்கி, நாம் கைத்தறித் துணியை விற்றபோதுகூட, இவர்கள், 'என்னய்யா இது!' என்று, அனுதாபங் காட்டி, அரசியல் போதனைதர முன்வந்தவர்கள் என்பதும், நினைவிலிருக்கிறது நமக்கு.

ஆகவே, அப்படிப்பட்டோரை, 'எதனையும் கொஞ்சகாலம் கழித்து சரி என்று ஒப்பும்,' மதிகொண்டோர் என்று ஒதுக்கிவிட்டு, தலைமைக் கழகம் அனுப்பியிருக்கும் இந்தச் சித்திரங்களை, ஆங்காங்கும் வைக்கக் கோருகிறோம் — சுவரில் ஒட்டினால் விரைவில் கிழிந்துவிடக்கூடும், ஆதலால், ஒரு 'போர்டு' போல ஒவ்வொரு இடத்திலும் தொங்கவிடவேண்டும்—பல திங்களுக்கு அவை ஆங்காங்கே இருக்குமாறு, செய்யவேண்டும்.

ஏன், இவ்வளவு வலியுறுத்துகிறோமென்றால், நாம் சொல்லுகிற ஒரு கொள்கைக்கு, மாற்றாரிடமிருந்து கிடைக்கின்ற ஆதரவை, சாதாரணமானதாகக் கருதிவிடமுடியாது. அதிலும், 'மித்திரன்' ஏடுகள், எளிதில் ஏற்கக் கூடியவை அல்ல, நம் எண்ணத்தை!

எலிவளை எலிகளுக்கே — திராவிட நாடாமே, திராவிட நாடு — வடக்காம், தெற்காம்; இதென்ன வம்புப் பேச்சு!-துவேஷ புத்திகொண்டவர்கள்—சிறுபிள்ளைத்தனம்—முட்டாள் கூட்டம்-என்றெல்லாம் சொல்லியோரின் சொந்தக் குரல்கள், அவை. அங்கே, இப்படியொரு சித்திரம்! வடநாடு வாழ்கிறது, தென்னாடு ஏமாற்றப்படுகிறது; என்பதை படித்தோர் மட்டுமல்ல, கண்ணுள்ளோர் யாவரும் கண்டால் தெரிந்துகொள்ளும்படி, சித்திரம் தீட்டி விளக்கப்படுகிறது.

இந்த விளக்கம், நாம் நடத்திய ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாளுக்குப்பிறகு ஏற்பட்டிருக்கிறது, என்பதையும் நாம் மறப்பதற்கில்லை.

சித்திரம் தீட்டினர் மித்திரன்! அது காட்டும் விளக்கத்தை, டில்லி பார்லிமெண்டிலே, கர்ஜித்துக் காட்டியிருக்கிறார்கள், தென்னாட்டிலிருந்து சென்ற உறுப்பினர்கள்!

அந்த உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் — பாரத மாதாவைத் துண்டாக்குவதா என்று பயந்தவர்கள்—பிரிவினையால் தீருமா பிணி என்று கேட்டவர்கள்—வடக்காவது, தெற்கை ஏமாற்றுவதாவது என்றெல்லாம் பேசியவர்கள் என்பதையும் ஒருமுறை எண்ணிக் கொண்டு, அதே சமயத்தில், அவர்கள் இப்படியெல்லாம் பேசியிருக்கிறார்கள் என்பதையும் கவனத்தில் வைத்துப் பார்க்கும்போதுதான் அந்தக்கூற்றுகளில் பொதிந்திருக்கும் 'சக்தி' விளங்கும்.

நேருவைக் கண்டால், அச்சம் அல்லது மரியாதை காட்டக்கூடியவர்கள்-அந்த நேருவுக்கு, இப்படியெல்லாம் பேசுவது பிடிக்காது என்பதையும் அறிந்தவர்கள்—எனினும், பேசுகிறார்கள்! மாநாடு முதல், மக்களை ஆளும் மன்றம் வரையில் பேசுகிறார்கள்!

இப்படிப்பேச, என்ன காரணம்? திடீரென, திராவிட முன்னேற்றக் கழகத்திடம் ஏற்பட்டுவிட்ட பாசத்தாலா?—அல்ல, அல்ல. திராவிடநாடு பிரியவேண்டும், என்று அவர்கள் எல்லாம் ஒத்துக்கொண்டதாலா—அவசர சாமிகள் அல்ல நாம், அந்த முடிவுக்குவர. பிறகு, ஏன் நம்மைப் போலவே பேசுகிறார்கள்! சித்திரம் தீட்டுகிறார்கள், என்றால் அதுதான் நாம் தாங்கியிருக்கும் இலட்சியத்தில் பொதிந்திருக்கும் உண்மையாகும்.

திராவிடநாடு திராவிடருக்கே!—வடக்கிலிருந்து பிரிந்தால்தான் நாம் வாழமுடியும்-வடநாட்டைக் கவனிக்குமளவுக்கு டில்லியார் தென்னாட்டைக் கவனிப்பதில்லை—என்று, நாம் எடுத்துக் காட்டுகிற விஷயங்களை, உண்மையென்று இப்போதுதான் உணருகிறார்கள்! அப்படி உணருவதால், இவ்வண்ணம் எடுத்துரைக்க முன்வருகிறார்கள்!!

வடக்கு செய்யும் ஓரவஞ்சனையைப் பற்றி, மார்ச் 20ந் தேதி நாம் கண்டனக்குரல் எழுப்பினோம்-இதோ, கடந்த 4ந் தேதியன்று மைசூர் சட்டசபையில் ஏகமனதாக நமது குரல் கேட்டிருக்கிறது:—

✻

''சாமராஜ நகரிலிருந்து ஈரோட்டுக்கு ஒரு ரயில்பாதை போட்டுத் தருமாறு டில்லி சர்க்காரை எவ்வளவோ மன்றாடியும் மறுத்துவிட்டது. ஐந்தாண்டுத் திட்டத்தில், அதற்கு, வழி செய்யவில்லை.''

—பி. ராச்சையா

✻

''ரயில்வேக்களை அதிகமாக்கும் விஷயத்தில் தென்னிந்தியாவின் தேவைகள் முழுவதையும், மத்திய சர்க்கார், புறக்கணித்து வருகிறது. ஏனிப்படி, மாற்றாந்தாய் மனப்பான்மையுடன், யூனியன் சர்க்கார் நடக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை''

—வி. எம். மாஸ்கான் ஹாஸ்.

✻

"வட இந்தியாவில் ரயில்வேத் தொடர்புகள், அதிகம். இந்தியத் தேசப்படத்தைப் பார்த்தாலே போதும் வலேபோல பின்னப்பட்டிருக்கும் ரயில்வேத் தொடர்புகள் தெரியும். ஆனல் தென்னிந்தியாவிலோ அப்படி இல்லே"

—என். குச்மாஸ்த்கவுடா.

*

"யூனியன் சர்க்காரால், நாம் அடையும் தொல்லேகள் கொஞ்சமல்ல. தென்னிந்திய மக்களின் ஆசைகளேயும், தேவைகளேயும் வடக்கிலிருக்கும் சர்க்கார் அலட்சியப்படுத்துவதாகச் சொல்லப்படுவதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். தென்னடு, பூர்ணமாகப் புறக்கணிக்கப்பட்டு வருகிறது"

—ஜ. முகம்மது இமாம்
(எதிர்க் கட்சித் தலேவர்)

*

"மத்ய சர்க்காரை நினேக்கும்போது, தென்னட்டு மக்கள் ஏமாற்றத்தால் சோகமடைகிருர்கள்"

பீமப்ப நாயக்.

*

"ஈரோட்டுக்கும் சாமராஜ நகருக்கும் ஒரு ரயில் பாதை அமைக்குமாறு மைசூர் சட்ட சபையில் 25 ஆண்டுகளுக்குமுன்னரே கோரிக்கை எழுப்பப்பட்டது. இன்று வரை பயனில்லே"

எல். சித்தப்பா.

*

"வரி செலுத்துகிறேம், மத்ய சர்க்காருக்கு. ஆனல், வசதிகளோ நமக்குக் கிடைப்பது இல்லே"

திருமதி சுப்பம்மா

*

"இந்திய சர்க்கார், ஒருதலேப்பட்சமாக நடந்துவருகிறது. தென்னட்டை மோசமாக ஆக்கிவிட்டது. சோகசித்திரம்போலச் செய்துவருகிறது"

—டி. சி. பாஸப்பா

*

சர்க்கார் சார்பில்லாத தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டதாம், ஒரு ரயில்பாதை அமைக்கவும் டில்லி காட்டும் தயக்கத்தைக் கண்டிக்கவும்.

அப்போதுதான், இவ்வளவு கண்டனங்கள் எழும்பியிருக்கின்றன!

இதற்குப் பதிலளிக்க எழுந்த முதலமைச்சர் அனுமந்தையா, "துரோகிகளே, சதிகாரர்களே! இப்படியெல்லாம் பேசுகிறீர்களே! சத்வகுணபோதனல்லவோ, நமது நேரு, அவருடைய ஆட்சியிலா, இப்படி, ஓரவஞ்சனே காட்டப்படுவதாகப் பேசுகிறீர்கள்?" என்று கர்ஜித்திருப்பார் என்றுதான், எவரும் எதிர்பார்ப்பார்கள். 'நம்ம' சுப்ரமணியம் அல்லபோலும், அவர்; அதனல், கொஞ்சம் துணிவுடனேயே வெளியிட்டிருக்கிருர், "மெம்பர்கள் சொன்னதை நானும் அங்கீகரிக்கவேண்டியவனகத்தானிருக்கிறேன். தென்னிந்தியாவின் ரயில்வே சிஸ்டம் குறித்து, ரயில்வே இலாகா முக்கிய கவனம் செலுத்தவேண்டியதுதான்".

அனுமந்தையா, முதலமைச்சர் — காங்கிரசிலேயுள்ள ஒரு நூண்—அவரும்கூட, சர்க்கார் சார்பில்லாத இத் தீர்மானத்தின்மீது பேசுகையில் இவ்வண்ணம் தெரிவித்திருக்கிருர்.

அதே தினத்தன்று, மீண்டும் பார்லிமெண்டில், ஏ. எம். தாமஸ் எனும் திருவாங்கூரைச் சேர்ந்த உறுப்பினர், "தென்னட்டை, மத்ய சர்க்கார் புறக்கணித்தே வருகிறது. சிறிதுகூட தென்னடும் முன்னேறவேண்டுமே என்று அக்கரை காட்டுவதில்லே" என்பதாகப் பேசி இருக்கிருர்.

இவ்விதம், மாற்றுர் மனதிலும், தென்னடு 'மாற்றுந்தாய்' மனப்பான்மையுடன் நடத்தப்படுகிறது எனும் எண்ணம் எதிரொலிக்கத் துவங்கியிருக்கிறது! இந்த எதிரொலிகளே, மக்கள் மன்றத்தில், நமது தோழர்கள் வைக்கவேண்டும்—அதற்கான ஒரு சிறு ஏற்பாடுதான், 'மித்திரனின் சித்திரம்' ஆங்காங்கும், அனுப்பிவைக்கப்பட்டிருப்பது.

இதுவரையில், நாம், இதே குமுறலேக் காட்டியதற்காக எள்ளி நகையாடப்பட்டோம் அவர்களால்! ஆனல், இன்று, அவர்களே, நமது குரலே எதிரொலிக்கிருர்கள்!! — இது, நமது கொள்கையின் வெற்றி; நாம், உண்மைக்காகப் பாடுபடுவோர் என்பதை எடுத்துக்காட்டும், வெற்றி.

இப்படி இவர்கள் எதிரொலிப்பதால் நமது கூடாரம் நோக்கி வந்துவிடுவார்களென்றே—திராவிடம்பிரிய வேண்டுமென்று முரசொலிக்க முன்வருவார்களென்றே, நாம் அகமகிழ்ந்துவிடவில்லே. அவ்வளவு அகத்தூய்மை, சீக்கிரம் ஏற்பட்டுவிட முடியாது! எனினும், நாட்டுப் பிரிவினேக்கென, நாம் காட்டும் முக்கியப் பிரச்னேயை—வடக்குக்கு தெற்கை வாழவைப்பதில் பிரியமில்லே எனும் உண்மையை — அவர்களும் அறியத் தலேப்பட்டிருக்கிருர்கள் என்பதால், அகமகிழ்கிறேம். அதனே, ஆங்காங்குள்ள, மாற்றுக்கட்சித் தோழர்களும், மக்களும் அறியும்படிச் செய்யவேண்டும். இந்தப் பணியினே, கழகத் தோழர்கள் செய்வார்களென, நம்புகிறேம்.

*

எதிர்காலம், எண்ணி!

———[: :]———

தோள்வலியால் நிறுவப்பட்ட அரசுகள் பல, சாய்ந்துபோனதற்குக் காரணம் சரியான 'பொக்கிஷம்' கைவசம் இல்லாததுதான் என்று, சரிதம் சொல்லும். மாவீரன் சிவாஜி, வீரத்தால் பெற்ற வியப்புறு சாம்ராஜ்யம் வீழ்ந்தமைக்கும்; உலகம் போற்றும் உன்னதப் பேரரசாம் ரோமாபுரி அழிந்து போனமைக்கும், 'பொக்கிஷங்கள்' வரண்டமையே காரணம் என்பர், அறிஞர்கள்.

'அரசு' கிடைத்துவிட்டால் மட்டும் போதாது, அதை நடத்துவதற்கு வேண்டிய ஆற்றலும் அறிவும் இருந்துவிட்டால் மட்டும் எதையும் சாதிக்க முடியும் என்பதல்ல, காரியங்களேச் சரிவரச் செய்ய அரசின் வசம் செல்வம் இருக்கவேண்டும். அந்தச் செல்வம் மன்னுதி மன்னர்களின்காலத்திலே தங்க ரூபத்திலும், வெள்ளிப் பணமாகவும் இருந்தது. அவைகளே, ஒரு நாட்டின் 'பொக்கிஷமாக'க் கருதப்பட்டது, அரசுக்காக மக்கள் செலுத்தும் வரிப்பணத்தைத் திரட்டிவைத்து, அந்தக்கால அரசுகள், பொக்கிஷத்தைச் செழிப்புள்ளதாக்கி வைத்திருந்தார்கள். இதனல், போர் மூண்ட காலத்திலும், புதிய மன்னன் பொல்லாதவனக இருந்த நேரத்திலும், அதிகவரி செலுத்த நேர்ந்து அல்லலுக்கு ஆளாயினர், மக்கள்.

இந்த அல்லல், இப்போதும் போகவில்லே. வெறும் வாளேயும் தோளேயும் அரசுகள் நம்பியிருந்த காலம் போய், அணுகுண்டுகளும் ஆகாய விமானப்படையும் அதிகரித்திருக்கும் இந்தக் காலத்திலும், அரசுகள் வாழ, மக்கள் வரிப்பணம் செலுத்தவே நேருகிறது.

ஆனல், முற்காலத்தில், ஒரு அரசின் செல்வம், மக்கள் செலுத்தும் வரிப்பணம்மட்டுமே என்று இருந்தது அதிலும், விவசாயிகள் செலுத்தும் வரித்தொகையே முக்கியம் என்று கருதப்பட்டது. அந்தக் காலம் மாறிப்போய், இப்போது வேறு சில வரிமுறைகள், ஆங்காங்கும் அமுல் நடத்தப்பட்டு வருகின்றன. இதனல், விவசாயிகள் செலுத்தும் வரிமட்டுமின்றி, வேறு பல தொழில்களில் இருப்போரும் ஏராளமான வரிகளேச் செலுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இப்படிச் செலுத்தப்படும் வரிகளே, நேர்முக வரி, மறைமுக வரி என்று இரண்டு வகையாகப் பிரிப்பர்,

அரசு நிபுணர்கள். விவசாயிகள் மூலம் வாங்கும் வரி, நேர்முக வரி. உதாரணம், நிலக் கிஸ்தி. தாங்கள் வரி செலுத்துவதாகத் தெரியாமல் வரி செலுத்திக்கொண்டிருக்கும் முறைக்கு, மறைமுக வரி என்று பெயர். உதாரணம், விற்பனை வரி. கடையில் வாங்கும் ஒவ்வொரு சாமானுக்கும் நாம் வரி கொடுக்கிறோம்—அது, வியாபாரிகளின்மூலம் அரசுக்குக் கொண்டுபோய் செலுத்தப்படுகிறது.

ஜனநாயகம் கோலோச்சும் இந்தக் காலத்திலே, அரசுகளுக்கு, நேர்முகவரிகளைவிட, மறைமுக வரிகள் மூலமே வருமானம் அதிகம் வருவதாகக் கணக்கிட்டிருக்கின்றனர். சென்னை அரசாங்கத்துக்குக் கூட நிலத் தீர்வையைவிட, விற்பனை வரிமூலம் வரும் வரித்தொகையே அதிகமாகும்! அதனால்தான் விற்பனை வரியை, 'காமதேனு' என்றும் 'கற்பக விருட்சம்' என்றும் அமைச்சர்கள், பாராட்டுகின்றனர்.

இந்த வரிமட்டுமல்ல, அரசின் பொக்கிஷத்துக்கு வருமானத்தைக் குவிக்கும், வேறு சில முக்கிய வரிகளும் உண்டு — அவை, **வருமானவரி, கலால் சுங்கவரி** என்பவைகளாகும். இவை, மக்களைப் பாதிப்பவைகளல்ல; பணக்காரர்களையும், வியாபாரிகளையும், செலுத்தும்படிச் செய்யும் வரிகளாகும். இந்த வரிகளை, எவ்வளவு வேண்டுமானாலும் அதிகரித்து, பணக்காரர்களிடமிருந்து வசூலிக்க முடியும். ஏனெனில், இந்த வரிகள், ஏழையின் வரிகளல்ல. பணம் படைத்தோரைச் சார்ந்தது—அதனால், எவ்வளவு வேண்டுமானாலும், வசூலிக்கலாம்.

இப்படி வசூலிக்கக்கூடிய வரிகள் அனைத்தும், இந்திய அரசில், 'டில்லி' வசமே! இருப்பதையும், ஏழைக் காத்தானும் கூத்தனும் செலுத்தக்கூடிய வரிகள் மட்டுமே 'மாகாணங்கள்' வசம் விடப்பட்டிருப்பதையும், நாம், எத்தனையோ முறை எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

நேர்முகவரி, மறைமுகவரி இவைகள் மூலம் வரும் பணம்மட்டுமின்றி, ஒரு நாட்டின் 'பொக்கிஷங்கள்' என்று இன்றையதினம் கருதப்படுபவை, அந்த நாடு பெற்றிருக்கும் வளம், அங்கே உற்பத்தியாகும் பொருள்கள், அவைகளுக்கு வெளிநாடுகளிலேயிருக்கும் செலாவணி முதலியவைகளாகும்.

இங்கிலாந்து — பெரிய செல்வர் நாடெனக் கருதப்பட்டது, அங்குள்ள 'லங்காஷயரும்,' 'மான்செஸ்டரும்' குவித்த பொருள்களுக்கு உலகெங்கும் செலாவணியிருக்கிறது என்று கருதப்பட்டபோது. அதற்காகவே, உலகின் பல பாகங்களில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இருப்பதாகவும் பேசப்பட்டது! நிலக்கரிதான், இங்கிலாந்தின் முக்கிய வளம்—ஆயினும் அந்நாடு, குபேரபுரியெனப் போற்றப்பட்டது, ஒரு காலத்தில்.

இப்போது, அந்தப் பட்டம் அமெரிக்காவுக்குச் சென்றுவிட்டது—காரணம், இங்கிலாந்தைவிட அமெரிக்காவில் அதிகப் பொருள்கள் உற்பத்தி செய்து குவிக்கப்படுகின்றன, அவைகளுக்கு வெளிநாடுகளிலிருக்கும் 'மார்க்கெட்டுகளும்,' அதிகம்.

உலக, நிலைமை இது.

நாட்டின் செல்வம், அது பெற்றிருக்கும் ஆலைகளும், அவை உற்பத்தி செய்யும் பொருள்களும் என்கிற காலம், இது. நாட்டின் 'பொக்கிஷம்' என்பது, வரிகள் மட்டுமல்ல, அந்த நாடு வெளியிடங்களிலிருந்து சம்பாதித்துவரும் பொருள்களுமாகும்—என்று கருதப்படுகிற காலம்.

இந்திய உபகண்டத்தின் ஒரு கோடியிலிருக்கும் நமக்கு, வெளியிடங்களிலிருந்து சம்பாதித்து வரும் வசதிகளுண்டா? கிடையாது. ஏனெனில் வெளிநாடுகளுக்குப் பொருள்களை உற்பத்தி செய்து அனுப்பக்கூடிய **ஆலைகள்** இங்கே இல்லை. நாம் இங்கிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடிய பொருள்களாக இருப்பவையெல்லாம்—**கைத்தறித் துணி; மிளகு முந்திரி மாங்கனீஸ்** போன்ற விளைபொருள்தான். ஆலைகளில் உற்பத்திசெய்து அனுப்பக்கூடிய அளவுக்கு, எதுவும் இல்லை, இங்கே!

அதோ, பம்பாய்! அது, இப்போது இங்கிலாந்தே மிரளுகிற அளவுக்கு ஆலைத்துணிகளை உற்பத்திசெய்து அனுப்புகிறது. பம்பாய்த் துறைமுகத்திலிருந்தும் கல்கத்தாவிலிருந்தும், அரசுக்குவரும் சுங்கவரியும், அதைவிட ஏற்றுமதியாகிச் செல்லும் பொருள்களும்—ஏராளம்! ஏராளம்!

ஆலைகள் அதிகமிருப்பதால், ஏற்றுமதிப் பொருள்களும் அதிகம்—துறைமுகப் பட்டினங்கள் நல்லவையாக இருப்பதால் சுங்கவரி அதிகமாக வரும் வசதியும் உண்டு.

இந்த வசதிகள் எதுவும் இல்லாது இருக்கிறதே, தெற்கு—என்று எண்ணும்போது, எதிர்காலம் இருள் மயமாகத்தெரிகிறது. அரசு பெற்றும் சீரழிந்துபோன சிவாஜியின் சாம்ராஜ்யம் கவனத்துக்கு வருகிறது.

உரிமைக்குரல் வலுத்து, ஒருநாளைக்கு, நமது தாயகம் சுதந்திரம் பெற்றாலும் பெற்றுவிடக்கூடும்—திடீரென.

அப்படி ஆட்சிப் பொறுப்பு வந்துவிட்டால் அரசை நிர்வகிக்கும் 'பொக்கிஷம் காலியாகவன்றோ கிடக்கும்! அரசுக்கு வரவேண்டிய செல்வங்களை, அடையும் வழிகள் இல்லாது — ஏழைகள் திகைக்கவும், இல்லாதோர் ஏங்கவுமான நிலைமைகள் தானே ஏற்படும். அதற்குப் போதிய பாதுகாப்பினை, இப்போதே, நாம் தேடிக்கொள்ள வேண்டும். அதனால் எழும்பிய முழக்கம்தான், "ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் எங்களுக்கும் நன்மைகள் வேண்டும்" என்பது.

நாளையதினம், அரசுரிமையையும் அதே நேரத்தில் செல்வமில்லா தேசத்தையும் பெறநேர்ந்தால்—அதைவிட ஆபத்து, வேறில்லை! அதனால்தான், இப்போதே விழிப்புடனிருக்கவேண்டும்! என்கிறோம்!

★

பிறப்பு

தோழர் காஞ்சி-கலியாணசுந்தரனார் அவர்களது அருமைச் செல்வன் காலஞ்சென்ற க. அருணாசலம் (ராமு) துணைவியார் அ. சரசுவதி அவர்கள் **31—3—55** வியாழக்கிழமை பகல் 3-30 மணியளவில் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார். தாயும் சேயும் நலம்.

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

பூந்தமல்லி ஐரோடில்!

"மானேஜர்! மானேஜர்!!"

"சார்...!"

"பத்திரிகை சர்குலேஷன் இப்படிக் குறைஞ்சு போயிட்டுதே, என்னய்யா, செய்கிறது?"

"ஆமாம்சார்! அதைப்பற்றி, நானே உங்களிடம் சொல்லணும்னு இருந்தேன்..."

"நல்ல ஆளையா! எப்பொழுது, சர்க்குலேஷன்' குறையுதோ—உடனே, என்னிடம் சொல்ல வேண்டியதுதானே, உம்முடைய வேலை..."

"எத்தனையோ வேலையிலேயிருக்கிங்க, நீங்க! அதிலும், காமராஜ மந்திரியா வந்ததிலேயிருந்து, 'ஆபீஸ்' பக்கங்கூட வரமுடியலே, உங்களுக்கு. அவருக்கு ஆலோசனை சொல்றதிலேருந்து, ஆதரவு குறையாம இருக்க பார்த்துக் கொள்கிறதுவரை பெரிய பெரிய வேலைகளில் ஈடுபட்டிருக்கிங்க... இதைக் கவனிக்க எங்கே நேரம் இருக்கப் போவுதுன்னு நினைச்சேன், சார்"

"அதைப்பற்றி, உனக்கென்னய்யா? ஆயிரம் வேலை இருக்கும் எனக்கு! அதுக்கும் இதுக்கும் என்னய்யா, சம்பந்தம்? நல்லவேளை! பத்திரிகையை மூடி, சாவியைக் கொண்டாந்து கொடுக்காம, இப்போதாவது என் காதிலே போடணுமனு நினைச்சீரே!...ஏனையா... பத்திரிகை குறையறதுக்கு என்னய்யா, காரணமாம்?"

"பலகாரணம் சொல்லி, எழுதுறுங்க ஏஜண்டுங்க..."

"என்னய்யா! பல......காரணம்?"

"ஒரு ஊரிலேருந்து, இன்னொரு பத்திரிகையிலே இன்னின்ன விஷயம் வருது—அது இல்லேன்னு எழுதுறுங்க; இன்னொரு ஊரிலேருந்து, இந்தப் பத்திரிகையிலே இவ்வளவு பெரிய படம் போடுறுங்க—அது இல்லே, உங்க பத்திரிகையிலேன்னு எழுதுறுங்க. ஒரு தோழர், ராசிபலன் ஏனய்யா போடுறீங்கன்னு கோபமா எழுதுருரு—கலர், கலரா இருக்கணும் ஒவ்வொரு பக்கமும்னு ஒருத்தர் ஆவலைத் தெரிவிக்கிருரு..."

"ஊம்! இதிலே, எது சரியானதுன்னு உமக்குத் தோணுது...'

"எல்லாம் சரியானதுன்னு தாங்க, எனக்குத் தெரியுது."

"அதெல்லாம் இல்லே! முக்கிய காரணம், பத்திரிகையிலே நான் எழுதாம இருக்கிறதுதான்... இல்லியா?"

"ஆமாங்க! ஆமாங்க! உங்க எழுத்து ஒவ்வொண்ணும் 'இமயம்' இல்லிங்களா.........படிக்கிறப்பவே, மனசிலே, 'பேரிகை' கொட்டுறது போல, இருக்குமே..."

*

ஆசிரியர், நிமிர்ந்து உட்காருகிருர்! துணை ஆசிரியர்களை, அழைத்து விஷயங்களை எடுத்துச் சொல்லிவிட்டு, ஆலோசனை நடத்துகிருர்.

*

"ஏனையா, மிஸ்டர் சுயம்பு! பத்திரிகையிலே எப்பவும், 'பளார், பளாரெ'ன்னு விஷயங்களிருக்கணும்...யாரையாவது ஒருத்தரை பிடிச்சு 'விளாசு விளாசு'ன்னு விளாசணும்...அப்பத்தான், வாசகர்களுக்கும், ஒருபரபரப்பு உண்டாகும்—இல்லையா!"

"ஆமாம், சார்! உங்களிடம் இத்தனை வருஷமா இருந்து நான் கற்றுக்கிட்டிருக்கிற 'ஜர்னலிசம்' இதுதானுங்களே..."

"ஊம் உதாரணமா, சொல்றேன். நாய் மனுஷனை கடிக்குது. அது, என்ன? சாதாரண விஷயம் தானே!"

"ஆமாங்க!"

"ஆனா, மனுஷன்போய் நாயைக் கடிச்சா...?"

"அது, அதிசயமுங்க!"

"அப்படிப்பட்ட அதிசயமான, எதிர்பாராத விஷயங்களையெல்லாம், வீசணும் பத்திரிகையிலே......இன்னையிலேருந்து, அப்படிப்பட்ட 'நியுஸ்'களாகப் பார்த்து கொட்டை எழுத்திலே, போடும். இப்படிச் சொல்லிட்டேங்கிறதாலே நம்ப சர்க்காருக்கு விரோதமானதையெல்லாம்போட ஆரம்பிச்சிடாதிர். எதிர்க் கட்சியிருக்குதுல்லே, எதிர்க்கட்சி—அதிலே இப்ப செல்வாக்கோடு இருக்கிற கட்சி, எது?"

"செல்வாக்கோடு இருக்கிற கட்சி..."

"திராவிட முன்னேற்றக் கழகம் தானே..."

"ஆமாம்! ஆமாம்! ஆனா..."

"என்னய்யா, ஆனல்...?"

"அவுங்களுக்கும்உங்களுக்கும்...',

"அது என் சொந்த விஷயம், ஐயா! அவுங்களைப்பற்றி என் மனசிலே, இருக்கும் ஆனந்தம். அதை நினைச்சா, பத்திரிகை ஓடவேணும்..."

"பத்திரிகை ஓடுகிறது, ரொம்ப முக்கியமுங்க!"

"ஒருபிடி, பிடியும் அவுங்களை! கன்னா பின்னான்னு, அவுங்களை திட்ட பல பத்திரிகையிருக்கு—எப்பப்பார்த்தாலும் ஏதாவது 'தொணதொணக்கத்தான்' சிந்தாதிரிப்பேட்டை 'டெய்லி' இருக்கு. அதனாலே, புதுசா, ஏதாவது எழுதணும்—அதை படிக்கிறப்ப, அந்த தி. மு. க. காரங்களே, மிரளணும்..."

"உதாரணமா, ஒண்ணு இந்த வாரம் எழுதிக் கொடுத்துடுங்க... அப்புறம் நானே ஜமாச்சிடுறேன்!"

*

ஆசிரியர், எழுதுகிருர்! எழுதுகிருர்!! எழுதிக்கொண்டேயிருக்கிருர்!!! கற்பனை, வீரம் கலந்த நடை, விளாசிவிட்டோம், விற்பனை அதிகமாகும் எனும் பூரிப்பு—இவைகளோடு, ஒவ்வொரு பக்கத்தையும் படித்துக்கொண்டே, எழுதுகிருர். எழுதட்டும்—பாவம், எத்தனையோ 'ஆரிய ஏடுகள்' கிண்ணாரம் கொட்டும்போது—நம்மை பற்றி எழுதியாவது நண்பரின் ஏடு, நடைபோட ஆசைகொண்டால் நமக்கெதுவும் நஷ்டமில்லை! ஆனல், இப்படி 'அதிர்வேட்டு'களை நம்பி மட்டும், நகர நினைப்பது — எப்போதும் லாபமில்லையே, என்கிற பரிதாபம் மட்டும் ஏற்படுகிறது. ஆசிரியர், என்ன நினைத்துக் கொண்டிருக்கிருரோ!!

★

உதைக்கும், கால்! முத்தமிடும், ரஷ்யா!

நான்கு ஆண்டுகளில்......!—என்று ஆனந்தத்தோடு, அறிவிக்கிருர். ரஷ்ய உதவியுடன் மத்யமாகாணத்தில் அமையப்போகும் எஃகு ஆலை, இன்னும் நான்காண்டுகளில், ஏராளமான எஃகை உற்பத்தி செய்விக்கும் என்று களிப்போடு, தெரிவிக்கிருர்.

கசையடி தருவதுபோல, அமெரிக்கரும் முதலாளிகளும் செய்யும் துஷ்பிரச்சாரத்துக்கு சரியான பதிலைத் தந்து, 'ரஷ்யா தரும் ஆலை உதவியின் பெருமை பிறகு புரியும், பாருங்கள்!' என்று அறை கூவி அழைக்கிருர்.

உதவியைப் பெரும் இந்தியருக்குக்கூட அவ்வளவு களிப்பு ஏற்படாது; ஆனால் ரஷ்ய எழுத்தாளர் குட்ஸாவுக்கு, ஏழை இந்தியா ஏற்றமடைவது, குதூகலத்துக்குரிய சம்பவமாக இருக்கிறது.

தோழரின் நல்லெண்ணத்தையும், அகமகிழ்ச்சியையும் அனைவரும், பாராட்டவேண்டும். ஏனெனில், இந்திய உபகண்டத்திலே ஒரு இரும்பாலை ஏற்படுவது அவ்வளவு மகிழ்ச்சியைத்தருகிறது!!

புதுடில்லியிலிருக்கும் ரஷ்யக் காரியாலயம் வெளியிடும், 'ரஷ்யாவின் கருத்துக் கதிரில்' அவரது கட்டுரையொன்று "இந்தியாவின் உற்ற நண்பர்கள் யார்? போலி நண்பர்கள் யார்?" என்பதை விளக்குகிறது, விபரமாக.

அமெரிக்கரும், பிற ஆதிபத்ய வாதிகளும், இந்தியாவுக்குள் 'ரஷ்ய ஆலை' ஏற்படுவதைப்பற்றி அசூயைகொண்டு ஏதேதோ சொல்லுவதாக, தோழர் குட்ஸாவ், குறிப்பிடுகிருர், அப்படிக் குறிப்பிட்டு, 'இந்தியாவுக்கு உற்ற நண்பன் ரஷ்யாவே' என்றும் பன்னிப் பன்னி, எடுத்துவிளக்குகிருர்.

புலிக் கூண்டிலே பசு சிக்காமல், புள்ளிமான்களின் உறவைக்கொள்வது, மகிழ்ச்சிக்குரிய விஷயமே.

அதனுலேயே, இந்த உபகண்டத்தில், 'ரஷ்ய ஆலை' உருவாவதை, நாம் வரவேற்கிருேம்.

கனிவு, அன்பு, ஆசை, ஆர்வம் —இத்தனையும் சேர்த்து, இந்தியாவுககு நாங்களே உற்ற துணைவன் என்று நிரூபிக்க விரும்புகிருர், ரஷ்யத் தோழர்.

அவரது ஆசையையும், அன்பையும் வரவேற்கிருேம்.

அதே நேரத்தில், இதோ ஒரு நிகழ்ச்சியையும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிருேம்.

பம்பாய் சௌபாத்தி கடற்கரையில், மாலைகள் குவிகின்றன, மலைபோல். வரவேற்புப் பத்திரங்கள்— வீரா! தீரா! சிங்கமே! தீனதயாளா! —என்று போற்றியபடி அவருக்குக் குவிக்கப்படுகின்றன. 100க்கு மேற்பட்ட வரவேற்புகள், குவிந்த மாலைகள் 6 அடிக்கு மேலிருந்தன, இவ்வளவு வரவேற்புகளும், பம்பாய் மாகாண காங்கிரஸ் தலைவரான எஸ். கே. பட்டீலுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. வரவேற்பில், 10000 வியாபாரிகள் — மக்கள்மட்டுமல்ல — பிரத்யேகமாகக் கலந்துகொண்டனராம். இவ்வளவு பெரிய பாராட்டு விழாவை ஏற்பாடு செய்ததும் மக்களல்ல—எட்டே எட்டு வியாபாரிகள்! விழாவுக்குத் தலைமை வகித்தவரும் ஒரு வியாபாரக் கோமான். காங்கிரஸ் தலைவரை, இவர்கள் இவ்வளவு விமரிசையோடு பாராட்டக் காரணம் என்ன? பெருத்த வெற்றி பெற்றுத் தந்தாராம், பட்டீல். யாருக்கு? — நாட்டுக்கு என்று சொல்லியிருக்கிருர்கள், பிரபுக்கள். நாட்டின் எந்தப் பிரச்னைகளுக்குச் சாவுக் குழி தோண்டினுர் பட்டீல் என்று கேட்டால் திகைப்பீர்கள்— ஆந்திராவில் கம்யூனிஸ்டுகளை எதிர்த்து தோல்வியடையச் செய்ய பணிபுரிந்தாராம், பட்டீல்—அதற்காகவே, 6 அடி உயரம் குவிய மாலை மலைகள், நூற்றுக்கணக்கான வரவேற்புகள்! பதினுயிரம் வியாபாரப் பிரபுக்கள் பிரசன்னம்!!

பட்டீலும், அவைகளைப் பெற்றுக்கொண்டு தெரிவித்திருக்கிருர். "கம்யூனிசம் என்ற நோய்க்கு இந்தியாவில் இடம்பெற வாய்ப்புதரக் கூடாது" என்று.

குட்ஸாவ், குதூகல மழை பொழிகிருர் — இந்தியாவுக்கு எமது உதவியால். என்னென்ன ஏற்படப் போகிறது தெரியுமா, என்று!

பட்டீல், பண முதலைகளின் பாராட்டுகளைப் பெற்று, 'இடம் பெறவே, வாய்ப்புதரக் கூடாது' என்கிருர்!!

வதைக்கிறேன், என்கிருர், காங்கிரஸ் தலைவர்! முத்தம் தருகிறேன் என்கிறது, ரஷ்யா!!

உண்மையிலேயே, வேதனைக்குரிய விஷயம் தான், இது.

இங்குள்ள கம்யூனிஸ்டுகள் என்ன சொல்வார்களோ — இந்த விசித்திரத்துக்கு.

★

சருகும் அரும்பும்!

எப்படித்தான் ஏற்பட்டதோ, 'அந்த ஆசை' தெரியவில்லை— 60–வயது கிழத்தாத்தா அவர்! 11-வயது சின்னஞ்சிறுமி அவள்!! இருவரும், மணமக்களானுர்கள்.

குழி விழுந்த கண்களுடன், தாத்தா நிற்கிருர்! குறும்பும், விஷயமேதும் அறியா திகைப்பும் அந்தக் குழந்தையின் முகத்திலே!! —எனினும், இருவரும் மணமக்கள்.

தாத்தா! பேத்தி!!—சதிபதியாகி இருக்கிருர்கள்.

ஆண்டவன் சந்நிதானத்திலே, அரும்புக்கும் பழத்துக்கும் திருமண விழா!

'அக்கிரமம்' என்றோர், 'அடாத காரியம்' எனத் துடித்தோர், 'மீசை நரைத்த கிழவா, ஆசை நரைக்கலையோடா உனக்கு?' என்று எண்ணியோர், கண்களிலே நீர் கலங்கப் பார்த்தோர், இவ்விதம், பலரகம்.

எனினும், 'விவாக முகூர்த்தம்' சுபமாக நடைபெறும் ஏற்பாடுகள் முடிந்துவிட்டன.

கண்டனர், இந்தக் கண்ருவியை, வாலிபர்கள்தாம் — வேறுயாருக்கு, ஆத்திரம் வரமுடியும்?—கண்களில் கனல்! அனல், இதயத்தில்! அடுக்காது—என்று ஆர்ப்பரித்து, எழுந்தனர்.

விவகாரம், 'கோயில் கமிட்டி'க்குப் போயிருக்கிறது.

"கிழவன்தான் கின்ரனும் கொட்டக் கருதினுலும், கிட்டயிருந்து அதை முடிக்க எங்கே போயிற்று, கோயில் பூசாரியுடைய புத்தி? தாத்தா, கட்டுவதா, தாலி! இந்த 'விவாகம் சுபமுகூர்த்தமுமல்ல' — செல்லத் தக்கதுமல்ல, என்று தீர்ப்பளிக்கவேண்டும்" என்பதாக, புகார் செய்திருக்கிருர்கள்.

சம்பவம், மலேயா தீபகற்பத்திலுள்ள கோலாலம்பூருக்கு அருகில் ஓரிடத்தில் நடைபெற்றுள்ளது. 'திருமணத் தம்பதிகள்' இருவரும், சீக்கிய மதத்தைச் சார்ந்தவர்கள்! சீறும் வாலிபர்களின் சினம் தாங்கமாட்டாமல், கிழமாப்பிள்ளை 'மனைவி'யுடன் இன்னேரிடத்துக்கு ஓடியிருக்கிருராம். ஊர், சிரிக்கிறது! ஆனுல், விரைவில், அச்சிரிப்பு அடங்கிவிடும் என்ற எண்ணத்தில் ஓட்டம் பிடித்திருக்கிருர், ஊரைவிட்டு,!!

★

அரசியற் கருத்துக்கள்

[அன்று முதல் இன்று வரை]

[பேராசிரியர் இருதயராஜ்]

இம்மாதிரி எண்ணம் எட்மண்ட் பர்க் கொண்டிருந்ததால்தான் இந்தியாவைப் பொறுத்துங்கூட அவர் இந்தியருடைய கட்சியை எடுத்துப் பேசினார். பிரிட்டனுக்கடியில் ஆளப்பட்ட நாடுகளில் வாழ்ந்த மக்களுக்கு நன்மையும் மனதிருப்தியும் ஏற்படும் காரியங்களையும் செய்ய வேண்டியதொரு கடமை இருக்கிறது. நம்மால் ஆளப்படுபவர்கள் தானே, அடங்கிக் கிடக்கவேண்டியவர்கள் தானே—அவர்களுடைய சுக துக்கங்களைப்பற்றி நமக்கென்ன கவலை என்றிருப்பது கடமையிற் தவறியதாகும் என்று பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு இடித்துக் கூறினார்.

"சட்டப்படி எதுசரிஎன்று பார்ப்பது எப்பொழுதும் சச்சரவுக்கே கொண்டுபோய் விடும். அதைவிட இரக்கப்பட்டு ஒருகாரியத்தை செய்வதுபார்ப்பவர்கள் இதுநல்லகாரியம் என்று சொல்லும்படியான காரியத்தைசெய்வது, 'இது நியாயமானது' என்று பலரும் சொல்லக்கூடியதைச்செய்வதுநாளடைவில்நன்மை பயக்கக்கூடியது. சூழ்நிலைக்குத் தக்காற்போல் நடப்பதே நல்லது" என்று கூறினார் பர்க்.

வயது வந்த பையனைப் பெற்றோர் அடித்து அடக்கிக் கீழ்ப்படிய வைக்க உரிமையிருக்கிறது. ஆனால் பையன் அடங்குவானா அன்றி எதிர்த்துக்கொள்ளுவானா, பலாத்காரமாகக் கண்டிக்காமல் வெறும் புத்திமதிகள் சொன்னால் கேட்பானா, கேட்காதவனாயிருந்தால், கண்டிப்பதற்கு மட்டும் பயந்துவிடுவானா, அப்படியே பயப்பட வைத்தாலும் எத்தனை நாளைக்கு அவன் அந்தப் பயத்திலேயே வாழ்வான், தானாகப் பிழைக்க முடிந்த நிலையை அடைந்ததும் பயம் மாறி தகப்பனை விட்டுப் பிரிந்துவிட மாட்டானா—இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்துப் பெற்றோர் நடந்துகொள்ள வேண்டியது அவர்களுக்கு எவ்வளவு நல்லதோ, கண்ணியமானதோ அதுபோலவேதான் அரசாங்கமும் குடியேற்ற நாடுகளை நடத்தும் விதமும் இருக்கவேண்டும்.—இதுதான் பர்க் விரும்பியது.

ஒப்பந்தக் கொள்கையை அவர் அவ்வளவாக ஆதரிக்கவில்லை. மதத்தின் அடிப்படையில்தான் சமுதாயம் அமைந்திருக்கிறது. இயற்கையாகவே மனிதன் மதப்பற்றுள்ள மிருகம். சமுதாயம் மட்டுமின்றி அரசுங்கூட தெய்வீக ஸ்தாபனம்தான், என்றார்.

அரசியல் சமூகமானது இயற்கையான வளர்ச்சியுடையது. தாவரங்களும், மனிதரும் எப்படி தோன்றியதிலிருந்து வளர்ந்து முதிர்ச்சியடைவது இயற்கையோ, அது போலவேதான் அரசு என்ற ஸ்தாபனத்திற்கு ஒருவித உயிர் உண்டு. அதற்கும் வளர்ச்சியும், உணர்ச்சியும், மாறுதல்களும் உண்டு. எப்படி ஒரு மனித உடலுக்குப் பிணி ஏற்பட்டால் அது தீர மருந்து தரப்படுகிறதேயன்றி உயிரைப் போக்கும்படியான மாற்றம் எதுவும் செய்வதில்லையோ, அதுபோலவே சமூகத்தில் கோளாறுகள் ஏற்பட்டால் அவைகள் தீர சீர்திருத்தம் தேவையே தவிர புரட்சியின்மூலம் அடிப்படையையே மாற்றுவது தவறு.

காலந்தான் வளர்ச்சிக்குக் காரணம். நாளடைவில், சமூகம் வளரும். அதன் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவேண்டுமென்ற எண்ணத்தோடு பக்குவமடையாத, பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராயில்லாத ஒரு சமூகத்தில், முதிர்ந்த அனுபவம் நிறைந்தவர்களாலேயேமட்டும் நடத்தக்கூடிய ஒரு அரசியல் அமைப்பை, புரட்சியின்மூலம் புகுத்தினால், அது எப்படி இருக்குமென்றால், ஒருவன் தான் துரிதமாய் வளர்ச்சியடைய வேண்டுமென்று கருதி, அதற்காக விலையுயர்ந்த மருந்துகளையெல்லாம் வாங்கி, ஒரேயடியாகச் சாப்பிடுவதுபோலத்தான் இருக்கும். அம்மாதிரி மருந்து சாப்பிடுவதனால் எதிர்பார்த்த வளர்ச்சி ஏற்படாமல் போவதோடு, உடலுக்கும் பல கெடுதிகள் உண்டாவதுபோல, சமூகத்திலும் புதிய வளர்ச்சியை செயற்கையாக ஏற்படுத்துவதும் கெடுதலில் முடியும் என்றார், பர்க்.

காலம் செல்லச் செல்ல, சூழ்நிலைகள் மாறி, பழைய அமைப்புகள், ஸ்தாபனங்கள், காலங்கடந்தவைகளாக மாறுகின்றன. அவைகளை அப்பொழுது, ஒன்று சீர்திருத்த வேண்டும் அல்லது உபயோகமற்றவைகள் என்று நீக்கிவிடவேண்டும்.

எப்பொழுதுமே ஒரேமாதிரியான சட்டம் உரிமை இவைகளைப்பற்றி சூழ்நிலைகளைக் கவனியாமல் பேசிக்கொண்டிருப்பது தவறு. காலத்துக்குத் தக்கவாறு, சூழ்நிலைக்குத் தக்கவாறு, ஒவ்வொரு காரியத்தையும், அநுபவத்தையொட்டியே தீர்மானிக்கவேண்டும் என்றார்.

இயற்கையாகவே மனிதருக்கு உரிமைகள் உண்டு என்பதை அவர் மறுத்தார். சுதந்தரமாக, சமத்துவமாக வாழ்வதற்கு உரிமை உண்டு என்பதை அவர் நேரடியாக எதிர்க்காவிட்டாலும், அதைப் பற்றி அவர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. எல்லாவிதமான சட்டங்களுக்கும் மேலானவை கடவுட் சட்டங்கள். அவைகளுக்கு முரணில்லாமல், அரசில் ஏற்படுத்தப்படும் 'சிவில்' சட்டங்கள் எந்தெந்த உரிமைகளை அனுமதிக்கின்றனவோ, அவைகளைத்தான் மனிதன் கொண்டாடலாம். ஏதோ ஒரு காலத்தில், மனிதன் இயற்கைநிலையில் இருந்தபோது ஏற்பட்டதாகக் கூறப்படும் இயற்கைஉரிமைகளுக்கு அரசில் இடம் கிடையாது. இயற்கை உரிமைகள் இருக்கும் இடத்தில், அரசு, ஒழுங்கு, கட்டுப்பாடு இருக்கமுடியாது. அராஜகம் தான் நிலவமுடியும்.

ஒருவன் சமூகத்தில் பிறக்கும் பொழுது, அவனுடைய சம்மதத்தையோ விருப்பத்தையோ யாரும் முன்கூட்டி அறிவதில்லை. தன் சம்மதமின்றி ஒரு சமூகத்தில் அங்கம் வகிக்கும் ஒருவன் அச்சமூகத்தில் இருக்கும் பழக்க வழக்கங்கள், சட்டங்கள், சம்பிரதாயங்கள், இவைகளைக்கடைப்பிடிக்க கடமைப்பட்டிருக்கிறான். அந்தச் சமூகம் பார்த்துத் தரக்கூடிய, பாதுகாக்கக்

கூடிய, உரிமைகளைத்தான் அவன் தன் உரிமையாகப் பெறமுடியும். அந்தச் சமூகத்தையே மாற்றி அமைக்க, அந்தச் சமூகத்தில் புரட்சிசெய்யத், தனக்கு உரிமை இருக்கிறதென்று வாதாடுபவன் சமூகத்தின் விரோதி என்று பர்க் கருதினார்.

உண்மையில் சமத்துவம் மக்களுக்குள் ஏற்பட முடியாதென்பதே பர்க்குடைய கருத்து. "விக்" கட்சியில் பிரபுக்களுடைய நிழலிலேயே வாழ்ந்தவர் பர்க். அவர் சமத்துவத்தை எதிர்த்ததில் வியப்பொன்றுமில்லை. "எல்லா மனிதருக்கும் சம உரிமைகள் உண்டு. ஆனால் சம அந்தஸ்துக்கு உரிமை கிடையாது" என்றார். கொள்கைகாக அல்லது இலட்சியத்துக்காக உரிமையைப்பற்றி உரத்தக்குரலில் பேசுவது நடைமுறையில் அநீதி இழைப்பதாகும் என்றார். உண்மைச் சுதந்திரம் ஒவ்வொருவரும் தன் இச்சைகளை அடக்குவதில்தான் அடங்கியிருக்கிறது. சுயேச்சையையும், மிருக இச்சைகளையும் அடக்குவதும் உரிமைகளில் ஒன்றுதான். மனிதருடைய உரிமைகளைப் பெரிதாக்கி அதையே வலியுறுத்துவது அராஜகத்துக்கு அடிகோலுவதாகும்.

சமுதாயம் என்று ஏற்படுத்துவது இந்தக் கற்பனை உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்கே. நீதியிலிருந்து பிரிக்க முடியாத, கட்டுப்படுத்தப்பட்ட சுதந்தரம்தான் உண்மையான சுதந்தரம் என்றார்.

பழமைக்கும் சம்பிரதாயத்துக்கும் பர்க் அதிக மதிப்பு வைத்திருந்தார். வெகு காலமாக நிலைத்திருக்கும் எந்த அமைப்பையும் நினைத்த மாத்திரத்தில் மாற்ற முயற்சிப்பது தவறு. அழிப்பதல்ல, இருப்பதை வைத்துக்கொண்டே, முடிந்தால் அதை சீர்படுத்தி செம்மைப்படுத்துவதே சீர்திருத்தம் என்பது. சீர்திருத்தம் செய்வதனால் எவருக்கும் அநீதி இழைப்பதாக இருக்கக் கூடாது; என்றார்.

தன்னுடைய நாட்டில் பிரிட்டிஷ் அரசாட்சி இருந்த நிலையை பர்க் அங்கீகரித்தாரோ இல்லையோ அதை சீர்திருத்த முயற்சிப்பது, சீர்குலைப்பதாகவே முடியும் என்று கருதினார். அவருடைய காலத்தில் பிரிட்டனில் இருந்த அரசாட்சி பல குறைகளையுடையதாயிருந்தது. மக்கட்சபையாகிய காமன்ஸ் சபையில் கிராமப் பகுதிகளிலிருந்து 84-பிரதிநிதிகளும், நகரங்களின் பிரதிநிதிகளாக 350-க்கு மேலாகவும் வீற்றிருந்தனர். ஓரளவுக்கு நிலமுடையவர்கள்தான் வாக்குரிமை பெற்றிருந்தனர். குத்தகைதாரர்கள், நிலம் வைத்திருந்தாலும் ஓரளவுக்குக் குறைவாக வைத்திருந்தவர்கள், கூலிவேலை செய்பவர்கள் இவர்களுக்கெல்லாம் வாக்குரிமையே கிடையாது. இந்த நிலைமை கிராமங்களில்.

நகரப் பகுதிகளில் தேர்தல் முறைகள் பலவிதமாயிருந்தன. சில நகரங்களில் குறிப்பிட்ட ஒரு சிலர், அதாவது அதிக காலம் அங்கு குடியிருந்தவர்கள் மட்டும் வாக்குரிமை பெற்றிருந்தார்கள். சில நகரங்களில் அந்நகர சபைகளின் அங்கத்தினர்களுக்கு மட்டும்தான் வாக்குரிமை இருந்தது. சிலவற்றில் நகரில் வாழ்ந்த எல்லோருக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட்டது. சில நகரங்களில் ஒரு காலத்தில் மக்கள் வாழ்ந்திருந்து பிறகு பாழடைந்து போயிருந்த போதிலும் அவர்களும் இரண்டு பிரதிநிதிகளை அனுப்பினர். அப்படிப்பட்ட நகரங்களை பணம் படைத்தவர்கள் விலைக்கு வாங்கி எப்பொழுதும் தங்கள்சுற்றத்தாரையும் சிநேகிதர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகக் காமன்ஸ்சபைக்கு அனுப்பினார்கள். அநேக நகரங்கள் ஆக்ஸ்போர்டு என்று இப்பொழுது பிரசித்தி பெற்ற நகரம் கூடத்தான்—தங்களுடைய பிரதிநிதிகளை அனுப்பும் உரிமைகளை ஏலங்கூறி விற்றன. மிட்ஹர்ஸ்ட் என்ற நகரில் வீடுகளே கிடையாது. சில கற்கள்தான் கிடந்தன. பழையசாரம் என்ற நகரில் வாக்காளர்களே கிடையாது. அப்படியிருந்தும் அவைகளும் பிரதிநிதிகளை அனுப்பிவந்தன. அவைகள் அநேகமாகப் பிரபுக்களுடைய சொத்தாக இருந்தன. தேர்தல் காலங்களில் அப்பிரபுக்கள் தங்களுக்கு விருப்பமானவரை இந்த நகரத் தேர்தல் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகக்காமன்ஸ்சபைக்கு அனுப்புவார்கள். இவ்விதம் அக்காலத்தில் செல்வாக்கு மிகுந்த பிரபுக்களில் பலர் ஒவ்வொருவரும் இரண்டு மூன்று இன்னும் அதற்கு மேற்பட்ட பிரதிநிதிகளை அனுப்பக்கூடிய சக்தி பெற்றிருந்தனர். அவர்களால் அனுப்பப்பட்ட இந்தப்பிரதிநிதிகள் தங்கள் எஜமானர்களின் விருப்பப்படி காமன்ஸ் சபையில் நடந்தனர். அதனால் இம்மாதிரி பிரபுக்கள் காமன்ஸ் சபையைத் தங்கள் விருப்பம்போல் ஆட்டிவைத்துக் கொண்டிருந்தனர்.

இன்னும் இங்கிலாந்தில் அக்காலத்தில் வாக்காளர் பட்டியலே இருந்ததில்லை. பெண்களுக்கும், யூதர்களுக்கும், கத்தோலிக்கர்களுக்கும் வாக்குரிமை மறுக்கப்பட்டிருந்தது. மொத்தத்தில் நூற்றுக்கு நாலு சதவிகிதம்தான் மக்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்தது. பிரதிநிதிகளுக்கு சம்பளம் கொடுக்கப்படாததால் பணக்காரர்கள்தான் பிரதிநிதிகளாகச் செல்ல முடிந்தது.

இவ்வளவு குறைகள் காணப்பட்டபோதிலும், பர்க் இவைகளில்

போன் 40. தந்தி: "ILWA"

குறுகிய கால வகுப்புகள்

முன் வருஷங்களில் நடத்தியதுபோல ஏப்ரல் மாதம் 24-ம் தேதி முதல், ஜூன் மாதம் 5-ம் தேதி வரை ஆடோமொபைல் ஸர்வீஸ் என்ஜினீயரிங், ரேடியோ சர்வீஸ் என்ஜினீயரிங் ஆகிய, ஆறு வாரங்கள் குறுகிய கால விடுமுறை வகுப்புகள் நடத்தப்படும். இதற்காக 18—4—55-ந் தேதியே இங்கு சேருமாறு வர வேண்டும்.

விபரங்களுக்கும், பிராஸ்பெக்டஸுக்கும் கீழ்க்காணும் விலாசத்திற்கு உடனே எழுதுக:

முகாம்: லண்டன்.
27—3—55

G. D. NAIDU
பிரஸிடெண்ட்,
இன்டஸ்டிரியல் லேபர் வெல்பேர் அஸோஸியேஷன் லிமிடெட்,
அவனாசி ரோடு, கோயம்புத்தூர்.

மாற்றம் செய்வதை விரும்பவில்லை. எவ்வளவோ காலமாக இருந்து வந்து நல்ல முறையில் மக்களுக்குப் பணியாற்றி வந்திருக்கும் பழைய அமைப்புகளைக் குறைகூறுவது தகாது என்றார். சுதந்தரம் இருக்க வேண்டியதுதான். ஆனால் அமைதி நிலவாத இடத்தில் கட்டுப்பாடு இல்லாத இடத்தில் சுதந்தரம் இருந்து என்ன பயன்? ஆகவே கட்டுப்பாட்டை நிலைநிறுத்தி அமைதியை நிலைநாட்டுவதிலேயே நாம் அக்கரையாயிருக்க வேண்டுமே தவிர, வெறும் சுதந்தரம் என்ற மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே இருப்பதில் பயனில்லை, என்றார்.

அரசியல் சீர்திருத்தம் செய்ய விரும்புகிறவர்கள் அவர்களுக்குப் பிடித்த எந்த ஒரு அயல் நாட்டு அரசியல் அமைப்பை முன்னே வைத்துக்கொண்டோ அல்லது ஒரு இலட்சிய அமைப்பைக் கற்பனை செய்துகொண்டு அதை முன்னே வைத்தோ ஆரம்பிக்கக் கூடாது. அந்த நாட்டில் அவ்வப்போது இருக்கும் நிலை, அந்த நாட்டின் பழங்கோட்பாடுகள், சம்பிரதாயங்கள் இவைகளை மனதில் இருத்தி; அந்தச் சமயத்தில் நடைமுறையிலிருக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகளையும் கடமைகளையும் பாதிக்காத வகையில் சீர்திருத்தம் செய்யவேண்டும். உதாரணமாகச் சொத்துச் சேர்த்து வைத்துக்கொள்ள இருக்கும் உரிமை ஜீவாதார உரிமை; அந்தஸ்துக்கும் அதிகாரத்துக்கும் சொத்துதான் அளவுகோல். அதனால் அந்த உரிமையை எப்படியும் காப்பாற்ற வேண்டும். பழைய அனுபவங்களை யொட்டி யாருடைய உடைமைகளையும் உரிமைகளையும் பாதிக்காத வகையில் எந்த சீர்திருத்தமும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும், என்று கருதினார்.

இருப்பதை அழிந்துபோகாதபடிக் காப்பாற்ற முயல்வதே, சீர்திருத்த மனப்பான்மையைவிட சிறந்தது. எந்த நாட்டில் சீர்திருத்தம், அதுவும் அடிப்படையை அடிக்கடி மாற்றும் சீர்திருத்தம் ஏற்படுகிறதோ அந்த அரசு அழிவுப் பாதையில் விரைவில் செல்லும், என்று அவர் சொல்லியிருந்த போதிலும், சூழ்நிலைகள் மாறி, மாற்றம் தேவை என்று ஏற்பட்டால் பழைய அமைப்புகளை—அழிக்காமல்—சீர்திருத்துவதில் தவறில்லை என்றும் அவர் ஒப்புக்கொண்டார்.

பிரஞ்சுப் புரட்சியை முதலில் ஆதரித்த பர்க், பிறகு புரட்சிக்காரர்கள் கட்டு மீறி நடக்கத் தொடங்கியதும் தன் ஆதரவை நிறுத்திக்கொண்டு மக்களின் கூட்டு சர்வாதிகாரத்தை கண்டிக்க ஆரம்பித்தார். காரணம், சாதாரண மக்கள் அரசியலில் கலந்து கொள்ளுவது முறையில்லாதது என்றெண்ணினார்.

பாமரர்களின் குறைகளை அவர் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. மன்னர், பிரபுக்கள், மதாசாரியர்கள், இவர்களுடைய பெருமை குலைந்துபோவதில் அவருக்கு பிரியமில்லை. ஏன் பிரான்சில் புரட்சி ஏற்பட்டதென்பதே அவருக்குப் புதிராக இருந்தது. காரணத்தைப் புரிந்துகொள்ளாவிட்டாலும் அதன் விளைவை அவர் புரிந்து கொண்டதைப்போல் வேறொருவரும், புரிந்துகொள்ளவில்லை. சமுதாயத்தைச் சீர்குலைத்து, அரசை அடியோடு அழித்து, பிரான்சில் எப்படி அந்தப் புரட்சி தலைகீழான மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அவர் முன்கூட்டியே தெரிந்துகொண்டார். குடியரசு, பிறகு அராஜகம், அதன் தவிர்க்க முடியாத போர்நிலை, அதிலிருந்து போர்த்தலைவரின் யதேச்சாதிகாரம்—இந்தப்பாதையில் தான் புரட்சி சென்று இறுதியில் முடியும் என்றார். அதுபோன்றே பிரஞ்சுப் புரட்சி போர் வீரனாக இருந்து பிறகு தளபதியான நெப்போலியன் யதேச்சாதிகாரத்தில் போய் முடிவெய்தியது.

மனிதர் எல்லோரும் சமமாகப் பிறந்தவர் என்ற ரூசோவின் கொள்கையை பர்க் எதிர்த்தார். அடிப்படையையே அவர் ஏற்றுக் கொள்ளாதபோது ரூசோவின் மற்றக் கொள்கைகளை, புரட்சி செய்ய இருக்கும் உரிமையை எப்படி அவர் ஏற்றுக்கொள்ளுவார்? மனிதருக்குள்ளே ஏற்றத்தாழ்வு இருப்பது இயற்கை. ஆளுபவர் வேறு; ஆளப் படுபவர் வேறு. மக்களுடைய இச்சைகளை அடக்கி, விருப்பங்களைக் கட்டுப்படுத்தி அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே அரசாங்கம் இருக்கிறது. மக்களை அடக்கி வைத்து ஆளுவதற்கு மக்களிலே ஒருவராயில்லாத, அதிகாரம் பெற்ற மற்றவர்களால்தான் முடியும் என்று அவர் கருதினார்.

1688ல் பிரிட்டனில் ஏற்பட்ட புரட்சியை ஆதரித்த பர்க் பிரெஞ்சுப் புரட்சியை எதிர்த்தது வியப்பாக இருந்தது. அக்காலத்திலேயே ஆனால் எல்லாவித முயற்சிகளும் வீணாகப் போய்விட்டால்—கடைசி ஆயுதமாக புரட்சியைக் கையாளலாம்—நல்லாட்சி நிறுவுவதற்கு என்று பர்க் நினைத்தார். அடிப்படையை மாற்றாமல் சீர்திருத்தம் செய்வதை வரவேற்றார். 1688ல் நடந்த புரட்சியில் அடிப்படை மாற்றம் ஒன்றுமில்லை. அதனால் அதை ஆதரித்தார். நீடித்து நிலைத்திருக்கும் அமைப்புகளில் மாற்றங்காண விழைவது, பழையக் கோட்பாடுகளையும் சம்பிரதாயங்களையும் தகர்த்தெறிய நினைப்பது—இவையெல்லாம் பழமையில் நம்பிக்கை கொண்டிருந்த பர்க்குக்கு பீதியை உண்டாக்கியது. அதனால் தான் தன்னுடைய காலத்தில் நடந்த பிரெஞ்சுப் புரட்சியை அவர் கண்டித்தார். 16வது நூற்றாண்டில் அவர் வாழ்ந்திருந்தால் நிச்சயம் லூத்தரை வன்மையாகக் கண்டித்திருப்பார். இயேசுவின் காலத்திலே அவர் தோன்றியிருந்தால் ரோமானிய சக்கரவர்த்திகளின் பக்கம் சேர்ந்துகொண்டு கிருஸ்துவ மதத்தையும் கோட்பாடுகளையும் கண்டித்து அவை பரவ ஒட்டாமல் தடுக்க முயன்றிருப்பார்.

(தொடரும்)

★

மகிழ்ச்சி

முல்லைக் கொம்பை தோழர் எம். பி. வடிவேல் அவர்களின் துணைவியார் மரகதவல்லிக்கு 29–3–55 அன்று பெண் குழந்தையொன்று பிறந்தது அறிய மகிழ்கிறோம்.

“திராவிட நாடு” விற்பனையாளர்
திருமகள் கம்பெனி
புத்தக வியாபாரம்
207. தாராவி, பம்பாய் 17.

3-பக்கத் தொடர்ச்சி

ஒழுக்கத்தைக் கெடுத்தே வந்திருக்கின்றன.

ஆரியமதம் நுழைவதற்குமுன், தமிழகத்தில், 'கற்புக்கு' நல்ல இடமும், 'ஒருவனும் ஒருத்தியும் இருந்து இன்பம் துய்ப்பதே—வாழ்க்கை (என்கிற நெறியும் அமைக்கப்பட்டிருந்தது.

ஆனால், லேடி ராம்ராவ் சொல்லும் 'வேதகாலம்' நுழைந்ததால்தான் கெட்டது. அந்த வேதகாலத்து சாபமும், மத சம்பந்தமான மூடநம்பிக்கைகளும் ஒழியவேண்டும்—என்பதையே, அறிவியக்கத்தாராகிய நாம் சொல்லி வருகிறோம்.

அம்மையார், 'வழுக்கி விழுந்தோர்' என்கிற அளவில் இருக்கிறார்கள், நாம், சமூகத்தின் சகல 'சாபத்தீடு' களுக்கும் வேதகால முறைகளே காரணம் எனச் சொல்லுகிறோம்.

அந்த முறைகளை முதலில், மனதை விட்டு அகற்றும் மார்க்கம் தென்பட்டு விட்டால்—ஜாதிகள் ஒழியும்! அதன் அடிப்படையில் எழும்பியுள்ள ஆதிக்கம் ஒழியும்!

பிறகு: வறுமையை ஒழிப்பது, அரசின் வேலை,

ஆனால், அந்த அரசையே வீழ்த்தக் கூடிய சக்தி வாய்ந்தது, வேதகால முறை.

வேதகாலம், வறுமை ஆகிய இரண்டையும் ஒழிக்கும், திட்டம் கொண்டதே, அறிவியக்கத்தின் பணி.

இரண்டில், எதையாவது ஒன்றை மறந்துவிட்டு, இன்னொன்றை மட்டும் செய்வதால், இந்த நாட்டின் சமூக அமைப்பில் எவ்வித முன்னேற்றமும் கண்டுவிட முடியாது,.

விபசார ஒழிப்புக்காக நாடெங்கும் ஒரே மயமான சட்டத்தைக் கொண்டு வரப் போவதாகச் சாற்றும், சர்க்கார் இதை நன்கு உணரவேண்டும்.

லேடி ராமராவ்கள், எப்போதாவது, இதுபற்றிப் பேசுகின்றனரே ஒழிய எங்கே, திடமனதுடன் நின்று, 'வேதகாலத்து சாபத்தை' அழிக்க முன் வருகிறார்கள்!

அதுதானே, ஆச்சரியத்துக் குரிய வேதனையாயிருந்து வருகிறது-இந்த நாட்டில்!! ★

தலைமைக் கழகம்: அறிக்கை

தி. மு. கழக மாவட்டக் கிளைத் தேர்தல்

மாவட்டம்	தேர்தல் நாள்	நேரம்	இடம்	தேர்தல் ஆணையாளர்
செங்கற்பட்டு	10—4—55	மாலை 2½ மணி	'திராவிடநாடு' அலுவலகம் காஞ்சிபுரம்	அ. பொன்னம்பலனார்
வட ஆற்காடு	10—4—55	மாலை 2 மணி	தி. மு. கழக அலுவலகம் ஆம்பூர்	என். வி. நடராசன்
தஞ்சை	10—4—55	காலை 10 மணி	முசாபுரி பங்களா, மாயவரம்	சத்தியவாணிமுத்து
மதுரை	10—4—55	மாலை 3 மணி	விக்டோரியா எட்வர்டு ஹால், மதுரை	இரா. நெடுஞ்செழியன்
இராமனுதபுரம்	10—4—55	மாலை 3 மணி	நாடார் பரிபாலன சங்கம், விருதுநகர்	தில்லை. வில்லாளன்
நெல்லை	10—4—55	காலை 10 மணி	தி.மு. கழக அலுவலகம், கண்ணம்மாள்கோயில்தெரு நெல்லைச் சந்திப்பு	ஏ. பி. தருமலிங்கம்
சென்னை	17—4—55	காலை 9 மணி	'அறிவகம்' இராயபுரம், சென்னை—13	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
தென் ஆற்காடு	17—4—55	மாலை 3 மணி	அமராவதி பங்களா (தபால் நிலையத்துக்கு அருகில்) நெல்லிக்குப்பம்	எம். எஸ். இராமசாமி
சேலம்	17—4—55	காலை 10 மணி	'சாந்தி நிகேதன்' கோயமுத்தூர் லாட்ஜ் சேலம்	காஞ்சி--கலியாணசுந்தரம்
கோவை	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், கடை வீதி, ஈரோடு	மதுரை எஸ். முத்து
திருச்சி	17—4—55	காலை 10 மணி	'கருணாநிதி பார்க்' என். எஸ். பங்களா, திருச்சிராப்பள்ளி	என். எஸ். இளங்கோ
நாஞ்சில்	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், வடசேரி நாகர்கோயில்	சி. பி. சிற்றரசு

"அறிவகம்" சென்னை
4—4—55

அண்ணாதுரை
பொதுச் செயலாளர்.

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St, Kancheepuram.